11 MAR 2004

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 19 (11.03.2004) வியாழக்கிழமை இதழ் :163

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை



எக்ஸ்போ எயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

## யாழ். நிலைமை பற்றி ஆராய சொல்ஹெய்ம் நேற்று விஜயம்!

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்: இவர்களுடன் நோர்வே தூதரக அரசியல் ஆலோசகர் லிசாவும் வருகை தந்திருந்தார்.

காலை 9.30 மணியளவில் யாழ். செயலகம் சென்ற எரிக் சொல்ஹெய்ம் குழுவினர், யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்கள் வாக்களிப்பதற்கு நோர்வே ஏற்பாடு செய்யவேண்டும்!

### சொல்ஹெய்மிடம் இளம்பரிதி கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வன்னி மக்கள் வாக்களிப்பதற்கேற்ற சுமுகமான சூழ்நிலையை நோர்வேயும், போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவும் ஏற்படுத்த வேண்டுமென நேற்று யாழ்.வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி கோரிக்கை விடுத்தார்.


சொல்ஹெய்மிடம் இளம்பரிதி மேலும் தெரிவிக்கையில் -

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி, இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயமான மக்களின் மனிதாபிமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கவச மீட்புப் படைப் பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டது!

### கிளாலியில் ஒத்திகை



இராணுவத்தில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் கவசமீட்பு, வாகன மற்றும் கவசவாகனங்களைச் செலுத்தும் படைப்பிரிவின் பரீட்சார்த்த ஒத்திகை நடவடிக்கை கிளாலியில் இடம்பெற்றது.

55 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வி.ஆர்.பு.சில்வாவின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்த ஒத்திகை இடம்பெற்றது.

செயலிழந்த கவச வாகனங்களை மீட்பது, சேதமுற்ற பாலங்களைத் துரிதமாக கடக்கும் வகையாக பாலங்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்க விவகாரத்தை வீண் பிரச்சினையாக்கக்கூடாது!

### தென்னிலங்கை கட்சிகளிடம் பீரிஸ் வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கருணாவால் ஏற்பட்டுள்ள பிரச்சினையால் ஏற்பட்டுள்ள நிலையை வைத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகள் வீண்பிரச்சினையை உருவாக்கக் கூடாது என நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

கருணா எடுத்துள்ள முடிவை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணும் சில அரசியல் கட்சிகள் முரண்பட்ட கருத்துக்களைப் பரப்பி வருகின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கருத்துக்கள் பல்வேறு வதந்திகளையும் முரண்பாடுகளையும் கொண்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு -அம்பாறை புலிகளின் பகுதியில் கண்காணிப்புப் பணி இடைநிறுத்தம்!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முடிவு

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளில் விடுதலைப் புலி

## பொறுத்திருந்து பார்த்த பின்னரே

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முடிவு

(கொழும்பு)

**மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட்டுவந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், தமது செயற்பாடுகளை இடைநிறுத்திக்கொள்வதாக அறிவித்தனர்.**

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறைப் பகுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதில் உண்டாகியுள்ள சிக்கல்களையடுத்தே தமது செயற்பாடுகளை இடைநிறுத்தியிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த மூன்றாம் திகதி முதல் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலையை அடுத்தே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளை வானில் வந்தோரால் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டார்!

### யாழ். நகரில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தில் - முனியப்பர் கோவில் வீதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரை வெள்ளை வானில் வந்த சிலர் கடத்திச் சென்று மிரட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. சம்பவத்தின்போது நியாஸ் என்பவரே கடத்திச்செல்லப்பட்டு மிரட்டப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். குற்றத் தடுப்பு பொலிஸ் நிலையத்தில் நியாஸ் முறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறுத்திருந்து பார்த்த பின்னரே கிழக்கு நிலையை தீர்க்கவேண்டும்!

### மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்

(கிளிநொச்சி)

மடடு. - அம்பாறை மாவட்டங்களில் உள்ள எமது உறவுகளுக்கு எந்தவித ஆபத்துமின்றி கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நாம் அங்கு செல்லவுள்ளோம் என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

பி.பி.சியின் தமிழோசைக்கு நேற்று அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள எமது அப்பாவி மக்களுக்கோ, அங்கிருக்கும் எமது போர்வீரர்களுக்கோ எந்தப் பிரச்சினையும் வராத வகையில் அந்த நிர்வாகத்தைப் பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் - தமிழ்செல்வன் இன்று சந்தித்துப் பேச்சு!

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை கிளிநொச்சியில் இச்சந்திப்பை முடித்துக் கொண்டு எரிக்சொல் ஹெய்ம் திருமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.



# தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளே என்பதை தேர்தல்மூலம் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம்

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்பதை சிங்கள பேரினவாத சமூகத்திற்கும் சர்வதேச உலகத்திற்கும வெளிப்படுத்த இந்த தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறப் போகும் நடாளுமன்றத் தேர்தல் சிங்கள பேரினவாதத்துக்கும் சர்வ தேச உலகத்துக்கும் தமிழரின் ஒற்றுமையை மீண்டும் ஒரு தடவை எடுத்துக் காட்டும் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி சந்திரிகா உருவாக்கியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தினை சரியான முறையிலே பின்பற்ற வேண்டும். இல்லையேல் நாமே நமக்குத் தண்டனையை வழங்கும் சூழ்நிலையை உருவாக்கிவிடும்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை இத் தேர்தல் மூலம் சிங்கள பேரினவாத சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

கடந்தகாலங்களில் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு நாடாளுமன்றத்தில் கதிரைகளைக் கொடுத்தார்களே தவிர தமிழரின் சுயநிர்ணய உரிமைகளோ அபிலாசைகளோ நிவர்த்தி செய்யப்படவில்லை. இது தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டு தமிழ் பிரதேசங்கள் கடற்பரப்புக்கள் உரிமைகள் என்பன சிங்கள பேரினவாதத்தால் சூறையாடப்பட்டு வந்தது.

இந்த வேளையில் புலிகள் விடுதலைக்கான போரினை ஆரம்பித்து சிங்கள பேரினவாதத்துக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி இன்று அவர்களை பேச்சு மேடைக்கு அழைத்துள்ளார்கள்.

ஆனால் போராட்டத்தில் சிங்கள பேரினவாதத்தை நசுக்கி வெற்றி கொண்டதானைத் தலைவன் தமிழினத்தின் விடுதலைக்காக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளனர்.

தமிழினத்தின் உரிமைகளுக்குப் பேராடி வெற்றிகளைப் பெற்றுத் தந்தவர்கள் இந்த வெற்றியில் பல ஆயிரம் போராளிகளை இழந்தது எதற்காக? தமிழினம் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகவே.

எனவே இதனைக்கருத்தில் கொண்டு தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருத்தரும் சிந்தனை செய்து வாக்களிக்கவேண்டும். இதன் மூலம் எந்த அரசு ஆட்சி அமைப்பதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழினம் தன்னைத் தானே நிர்வகிக்கும் நிலை உருவாகும். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகளே என்பதை தேர்தல் மூலம் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம்.

# பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு உரியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளதா அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

பாடசாலைகளுக்கு 2003 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதி உரியவாறு பயன்படுத்தப்பட்டதா என அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் கோட்டக்கல்வி அதிகாரிகளை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

வலயக்கல்வி அலுவலகங்களினால் பாடசாலைகளுக்கு 2003 ஆம் ஆண்டு நுகர்வுப் பொருள், மூலதனப்பொருள், திருத்தமும் பராமரிப்பும் ஆகியவற்றிற்கு ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு, மேற்பிரிவு என வழங்கப்பட்ட நிதி அவ்வவ்வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனவா என, எம்1 படிவத்தில் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து அனுப்பிவைக்குமாறு, அச்சுற்றறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (17)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாம் ஆதரவு வழங்கத் தயார்!

## பள்ளிவாசல் தலைவர் நகீப்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழ் - முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளைப்பிரதிபலிக்கும் தற்போது தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாம் பூரண ஆதரவு வழங்கவுள்ளோம் என யாழ்ப்பாணம் பள்ளிவாசல்களின் தலைவர் அல்ஹாச் நகீப் தெரிவித்தார்.

தமிழர்களும் முஸ்லீம்களும் ஒன்று பட்டவர்கள். சகோதர உணர்வு மிகுந்தவர்கள். எம்மக்கள் தீர்மானிப்பது தமிழீழ விடுதலைப்புலிகளையே. அவர்கள் ஊடாக தமிழ் மக்களுக்கும் முஸ்லீம்மக்களுக்கும் நல்ல தீர்வு கிடைக்குமென்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் வாக்களிப்பு நிலையங்களை அமைக்குக

## வடமராட்சி கிழக்கு பொது அமைப்புக்கள் வேண்டுகோள்

வடமராட்சி கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்கள் வாக்களிப்பதற்கு அந்தப் பகுதிகளில் வாக்களிப்புநிலையங்கள் அமைக்குமாறு அப்பகுதி பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சி வடக்கிலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். இந்தப் பகுதியிலுள்ள ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

இந்தப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் எந்தவித இடையூறுகளும் . இன்றி வாக்களிக்கமுடியும்.

இதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டும் எனவும் அந்தப் பகுதியில் இயங்கும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை இப்பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

# பளைப்பகுதி வர்த்தக நிலையங்கள் சுகாதாரப்பகுதியினரால் சோதனை!

பளைப் பகுதிக்கு சுகாதார பகுதியினர் திடீர் சோதனையை மேற்கொண்டு, உணவகங்கள் வர்த்தக நிலையங்கள், மீன் சந்தை, பொதுச் சந்தை ஆகிய இடங்களில் பொலித்தீன் பாவனை இருக்கின்றதா, எனப் பார்வையிட்டதுடன், உணவக உரிமையாளர்களுக்கும் அறிவுரை வழங்கினர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு வருகை தந்த கிளி.மாவட்ட சுகாதார பரிசோதகர் பளை பிரதேச சுகாதார பரிசோதகர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரும் இணைந்தே இந்த திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

உணவகங்களில் தாமரைஇலை, வாழைஇலை, பாவிப்பதை அவதானித்த பரிசோதகர் இந்த நடைமுறையை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறும், உணவகங்கள், வர்த்தக நிலைய உரியாளர்களைக் கேட்டுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (17)

## பருத்தித்துறை வைத்தியசாலை

# இரத்த வங்கி புனரமைக்க நடவழக்கை எடுக்கப்படும்!

## பணிப்பாளர் உறுதி

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் இரத்த வங்கியை புனரமைப்பு செய்வதற்கு இரத்த வங்கிப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

வைத்தியசாலையின் இரத்த வங்கியின் நிலைமையைப் பார்வையிடுவதற்காக வங்கியின் பணிப்பாளர் தலைமையிலான உயர்மட்டக் குழவினர் கடந்தவாரம் வைத்தியசாலைக்கு விஜயம்செய்தனர்.

வைத்தியசாலையின் இரத்த வங்கி புனரமைப்பு நிலைமைகள் தொடர்பாக கேட்டிருந்தனர்.

இந்த வைத்தியசாலையின் இரத்தவங்கி தற்பொழுது இயங்கமுடியாத நிலையில் இருப்பதாகவும், பொறுப்பாக டாக்டர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பதாகவும், இரத்தம் சேமிப்பதற்குரிய ஆவணங்கள் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இரத்த வங்கிக்கு பொறுப்பாக ஒரு டாக்டரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றும் இரு தாதி உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு இரத்த வங்கியில் இருவார பயிற்சியளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

இக்குழுவுடன் யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்கடர் சங்கரும் கலந்துகொண்டிருந்தார். (17)

## கடல்வள பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கடல்வள பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, கலந்துரையாடலொன்று, நாளை மறுதினம் (சனிக்கிழமை) நண்பகல் 12 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவையில் நடைபெறவுள்ளது.

கடல்வள பாடத்திற்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கல்வி அமைச்சினால், கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக, விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்வது சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளதால் கடல்வள ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே தூதுக்குழுவினர் ஈ.பி.டி.பியினரை சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று ஈ.பி.டி.பி. கட்சியின் வேட்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுமாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, நோர்வேயின் தரப்பில், சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் ப்ரஸ்ட்கர் ஆகியோரும், தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஈ.பி.டி.பியின் சார்பில் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்மாவட்ட பிரதம அமைப்பாளர் குகேந்திரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவதாசன், மதனராசா மற்றும், யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி வேட்பாளர்கள் பலரும், இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இப்பேச்சுக்களில் எதிர்வரும் தேர்தல்பிரச்சார நடவடிக்கைகளின் போது, புலிகள்தரப்பால் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் மற்றும் முட்டுக்கட்டைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இத்துடன் தற்போதைய அரசியல் நிலமைகள் மற்றும், புலிகள் அமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி என்பன தொடர்பாகவும் நோர்வே தரப்பினர் ஆவலுடன் கேட்டறிந்தனர் என, ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மீள்பரீட்சை தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இம்முறை பட்டம்பெறவுள்ள மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, இன்றுகாலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மீள்பரீட்சைக்கான விடயங்கள் தொடர்பாக ஆராய இருப்பதால் அனைத்து சம்பந்தப்பட்ட மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்

சென்றல் 100 ஆவது ஆண்டு போட்டிகள் சென்ஜோன்ஸ்

மார்ச் 18,19,20 ஆம் திகதிகள் (3 நாட்கள்)

மேற்படி விழாவின் ஆரம்ப நாள் அன்று நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் இரு பாடசாலைகளினதும் கடந்த காலங்களின்

- விளையாட்டுத்துறை முதல்வர்கள்
- துடுப்பாட்ட பொறுப்பாசிரியர்கள்
- துடுப்பாட்ட அணித்தலைவர்கள்
- துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்கள்

கௌரவிக்கப்படவுள்ளனர். மேற்படி பதவிகளில் கடமையாற்றியவர்கள் தங்கள் பெயர் விபரங்களை தங்கள் பாடசாலைகளின் விளையாட்டுத்துறை முதல்வர்களிடம் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தெரிவித்து தங்கள் வருகையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் வழங்கமுடியாதுள்ளதால் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்

யாழ்.மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம். அதிபர்கள் யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி-2312)



யசோ இறபர் ஸ்டாம் 75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட், 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2152)



நிறைஞ்சனாஸ் சங்கானை

ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த

பில்லா

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

BLOOD SPORT - 2

(சி-2262)



ராஜா யாழ்ப்பாணம்.

சிம்பு, சோனியா அகர்வால், நாசர் நடித்த

கோவில்



10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

## வடக்கு - கிழக்குப் பகுதிகளை

# பத்துவருடங்கள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் திட்டம் ஜனாதிபதியிடம் உள்ளதா?

## கேள்வி எழுப்புகிறார் கருணாசேன கொடித்துவக்கு



வடக்கு-கிழக்கு பகுதியை பத்து வருடங்கள் புலிகளிடம் கையளிக்கும் திட்டம் ஜனாதிபதியிடம் உள்ளதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு.


கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே, அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் அங்கு மேலும் உரையாற்றியபோது, புதியதொரு கட்டமைப்புக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கொண்டுவருவதாக ஜனாதிபதி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவது பற்றியும் அந்தப் பேட்டியில் பிரஸ்தாபித்தார்.

கடந்த இரண்டு வருடகாலமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஆதரித்துவிட்டு, அண்மையில் அதை விமர்சனத்திற்கு உள்ளாகிய ஜனாதிபதி - பொதுத்தேர்தலுக்கான காரணியாகவும், அதே யுத்தநிறுத்தத்தைத் தான் குறிப்பிடுகின்றார். திருத்தியமைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின்கீழ் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடரப்போவதாக விமல் வீரவன்ச கூறிவருகிறார். இதற்கான மேலதிக விளக்கங்களையும் கொடித்துவக்கு கோரியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பிற்குள்ளேயே முரண்பாடுகள் உள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரப்பரவலாக்கலை ஆதரிக்கின்ற அதேவேளை, ஜே.வி.பி. இதற்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாகக் கூட்டு முன்னணியின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி சரியான விளக்கம் தரவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி இரு தடவைகள் மேற்கொண்டுவந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமைக்கு இவ்வாறான விடயங்களே காரணமாகும்.

இந்த நிலையில், எதிர்காலத்தில் ஜனாதிபதியின் சமாதான நடவடிக்கைகள்மீது மக்கள் நமபிக்கை வைக்கலாமா என்றும் கருணாசேன கொடித்துவக்கு கேள்வி எழுப்பினார்.



கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்ட - பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸ்ரீவன் இவன்ஸ் நாடாவெட்டி அலுவலகத்தைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

# மட்டு-அம்பாறை பிரச்சினைக்கு முஸ்லிம்களை இழுக்க முயற்சி

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தற்போது தோன்றியிருக்கும் சில பிரச்சினைகளுக்குள், முஸ்லிம் சமூகத்தையும் இழுப்பதற்குச் சில முகவர்கள் முயற்சிகள் மேற்கொண்டுவருவதாக, முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குள் முஸ்லிம்களையும் சம்பந்தப்படுத்தி, நிலைமையை மேலும் மோசமாக்க இந்த முகவர்கள் முயற்சிகள் மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் - இத்தகைய சதிக்குள் தாம் சிக்கிக்கொள்ளப்போவதில்லை எனவும், முஸ்லிம்கள் வடக்கு - கிழக்குவாழ் தமிழர்களுடன் இணைந்து, உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கே விருப்பம் கொண்டுள்ளனர் என்றும் தெரவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களுள் ஒருவரான பஷீர் சேகுதாவூத் தலைமையில் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

முஸ்லிம்களது பாதுகாப்பையும், உரிமைகளையும் ஜனாதிபதியோ, பிரதமரோ உறுதிப்படுத்திவிடமுடியாது என்றும் அங்கு குறிப்பிட்ட அவர், சிங்களப் பேரினவாதத்தைக் காக்கும் ஜே.வி.பியுடனும், அதற்குத் தலைமையேற்றுள்ள ஜனாதிபதியுடனும், கூட்டமைத்துள்ள முஸ்லிம் தலைவர்கள் - முஸ்லிம்களது உரிமைகளைப் பெற்றுத்தரப் போவதாகக் கூறுவது கேலிக்கூத்தாகும் என்றும் தெரிவித்தார்.

## முஸ்லிம் கூட்டமைப்பு ஐ.தே.கவுக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு தமது ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் செயலாளர் எஸ்.எம்.நிசாம் மௌலானா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு எவ்விதத்தீர்வும் கிடையாது. முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சியால் மட்டுமே முடியும் என முஸ்லிம் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## கைக்குண்டு வீச்சில் களுத்துறையில் மூவர் பலி

(கொழும்பு)

களுத்துறைப் பகுதியில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

பேக்கரி ஒன்றின் வாடகை தொடர்பாக ஏற்பட்ட முறுகலே இந்தக் கைக்குண்டு வீச்சுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் மேலும் 5 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேக்கரி வாடகை தொடர்பாகச் சண்டையில் ஈடுபட்டிருந்த இருதரப்பினரில் ஒருதரப்பினர், மற்றத்தரப்பு மீது கைக்குண்டை வீசுவதற்காக அதனை எடுத்துவந்தனர்.


கைக்குண்டை எடுத்து வந்த நபர் அந்தக் கைக்குண்டின் கிளிப்பை தவறுதலாக கழற்றும்போதே, கைக்குண்டு வெடித்தது.

சண்டையை பார்க்கச்சென்ற இருவரே கைக்குண்டு வெடித்தபோது காயப்பட்டனர்.

காயமடைந்த ஐந்து பேரில் இரண்டு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (01)

# மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டவேண்டும்!

## அமைச்சர் டி.எம்.ஜயரத்ன



மோசடிகளில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களுக்கு, பொதுமக்கள் சரியான பாடம் புகட்டவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன.

அக்குறணையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ணணியின் வெற்றி தற்போது உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. இதன்காரணமாக எம்முடன் பல அரசியற்கட்சிகளும் இணைந்துள்ளன. இனமதபேதமின்றி அனைவரும் இணைந்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மககள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து, அமோக வெற்றிபெறச் செய்யவேண்டும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும். இவ்வாறு, செய்கின்ற பட்சத்தில் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டின் சமாதானத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியினர் - சமாதானம் என்று கூறியே நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தினர். இன்று மக்களிடம் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனை நம்புவதற்குப் பொதுமக்கள் தயாராகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினர் பல மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளமையே இதற்கு காரணமாகும்.

சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருகின்ற சந்தர்ப்பத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சிறந்த சேவையை ஆற்றவுள்ளது. சகல மக்களுக்கும் இனமத பேதமின்றி சேவைகள் செய்யப்படவுள்ளன. ஆகவே, எமது பக்கமே சகல மக்களும் இருக்கின்றார்கள்.

கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் எமது கட்சியில் அனைவரும் வெற்றிபெறவேண்டும். அனைத்து மக்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து, சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி அறியாதுள்ளார்!

## அமைச்சர் எஸ்.பி. குற்றச்சாட்டு



சமுர்த்தி செயற்பாடுகள் குறித்து, முழுமையாக அறியாமலேயே ஜனாதிபதி சந்திரிகா அதன்மீது குற்றம் சுமத்தியுள்ளார் எனச் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

பெறுமதிமிக்க சமுர்த்தி செயற்திட்டத்தை விரும்பியதுபோல் நடத்த, நான் இடமளிக்க மாட்டேன். வலுவான சட்டம் ஒன்றை இயற்றி, அதிகாரசபை அல்லது கூட்டுத்தாபனமாக மாற்றி இதனை நடை முறைப்படுத்தவேண்டும். சந்திரிகா குமாரதுங்க 8, 9 வருடங்களாக ஜனாதிபதியாக பதவிவகித்து வருகின்றார்.

எனினும், 1993 ஆம் ஆண்டுமுதல் இவரின் செயற்பாடுகள் குறித்து நான் கவலையடைகிறேன்.

ஏனென்றால், அதிகாரசபை கூட்டுத்தாபனம் தொடர்பாக அவர் அறிவித்துள்ளார். இல்லாதுபோனால் சமுர்த்தி, அதிகாரசபையின்கீழ் இயங்குவது அவருக்குத் தெரியாதிருக்கிறது. சமுர்த்தி ஒரு அதிகாரசபையாகும். நாட்டில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கே கூட்டுத்தாபனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பௌத்த தர்மத்தை முன்வைத்து அரசியலில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு

பௌத்த பிக்குகள் பல்வேறு அரசியல் நிலைப்பாட்டுடன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும், பௌத்த தர்மத்தை முன்வைத்து அரசியலில் ஈடுபடுவதை எதிர்ப்பதாகத் தமமவன்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியளாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதற்கு முன்னரும் பிக்குகள் நாடாளுமன்றத்தில் இருந்துள்ளனர். எனினும், அவர்கள் பௌத்த தர்மத்தை முன்வைத்த கட்சி சார்பாகச் செல்லவில்லை. காவி உடை தரித்திருந்தாலும் - மாக்ஸ், லெனின், டட்லி போன்றோர்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவே சென்றனர்.

தமக்கு எதிராகப் பல ஊடகங்கள் தேவையற்ற பிரசாரங்களை மேற்கொண்ட வருகின்றன. இந்த ஊடகங்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். நாம் ஒருபோதும் கட்சியின்பேரில் தேர்தலில் போட்டியிடவில்லை. பௌத்த மதத்தைக் காப்பாற்றவே களத்தில் இறங்கி உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதே நேரம், தேர்தலில் போட்டியிடாத பௌத்த பிக்குகளாலும் - செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. (01)

# அவுஸ்ரேலியா இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள்!



ஹைடன்

இலங்கை - அவுஸ்ரேலிய அணி களுக்கிடையில் காலியில் இடம் பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் 6 விக்கெட்டுக்களை இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி நேற்று தனது ஆட்டத்தில் 381 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் 28 ஓட்டங்களுக்குள் இலங்கை அணியின் மிகுதி நான்கு விக்கெட்டுக்களும் வீழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி சார்பில் முதல் இனிங்சில் அத்தப்பத்து 47, ஜெயசூரிய 35, ஜெயவர்த்தன 68, டில்ஷான் 104, திலகரட்ண 33, சமரவீர ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றனர். முரளிதரன், சமிந்த வாஸ் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ஷேன் வோர்ன் 5, கஷ்பிரோவிஷ் 2, ஜிலெஸ்பி, சைமன்ஸ், மக்கில் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முதலாவது டெஸ்டின் முதல் இனிங்ஸில் ஷேன் வோர்ன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் டெஸ்ட் போட்டியில் அவர் 496 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

இதன்பின் தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக லாங்கர் 32, பொண்டிங் 28 ஓட்டங்களைப் பெற்றனர். தற்போது ஹைடன் 106, மார்ட்டின் 10 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஜெயசூரியா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களையும் பெற்றுள்ளது.

# இந்திய மதுபான விளம்பரத்தில் நடித்த வசிமுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்!

இந்திய மதுபான விளம்பரத்தில் நடித்ததற்காக, பாகிஸ்தான் முன்னாள் கப்டன் அக்ரமுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம், சமீபத்தில் கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து ஓய்வுபெற்ற அவர் தொலைக்காட்சி வர்ணனையாளராக உள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த மதுபானக் கம்பனியின் விளம்பரத்தில் வசிம் அக்ரம் நடித்தார். ஹர்பஜன் சிங் (இந்தியா), மெக்ரா (அவுஸ்ரேலியா), ஜொன்டி ரொட்ஸ் (தென்னாபிரிக்கா), டிலான் (மேற்கிந்தியத் தீவுகள்), ஸ்ரீபன் பிளமிங் (நியூஸிலாந்து), அத்தப்பத்து (இலங்கை), அன்டி பிளவர் (சிம்பாப்வே) ஆகியோருடன் இணைந்து அவர் இந்த விளம்பரத்தில் தோன்றியிருக்கிறார்.

மதுபான விளம்பரத்தில் நடித்ததன் மூலம் அக்ரம் மத உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கிறார். அவருக்கு அபராதம் விதிப்பதுடன், பொது மன்னிப்பு கோர உத்தரவிட வேண்டும் என்று கோரி, முகமது பயாஸ் என்பவர் லாகூர் நீதிமன்றில் பொதுநல வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கில் நீதிமன்றில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி பத்திரிகை விளம்பரம் மூலம் அக்ரமுக்கு அழைப்பு விடப்பட்டது. ஆனால், அக்ரம் ஆஜராகவில்லை.

இதைத் தொடர்ந்து லாகூர் நீதிமன்ற நீதிபதி முஷ்காராவ், வசிம் அக்ரமுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அத்துடன், பொது மன்னிப்புக் கோரும்படியும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ள அக்ரம், குறித்த இந்திய கம்பனி விளையாட்டுப் பொருளும் தயாரிக்கிறது. எனவே விளம்பரத்தில் நடித்தேன் என்று கூறியுள்ளார்.

# நெடுந்தீவு கோட்டமட்ட வலைப்பந்தாட்ட முடிவுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 4 ஆம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

15 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் நெடுந்தீவு மகாவித்தியாலய அணியினர் நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி அணியை 15:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

17 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் நெடுந்தீவு மகாவித்தியாலய அணியினை, நெடுந்தீவு றோ.க.மகளிர் அணி 9:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

19 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அணி, நெடுந்தீவு மகாவித்தியாலய அணியை 8:7 என்ற கோல்க் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் தீவக வலயமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.(113)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்துக்குட்பட்ட யாழ் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)

★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்துக்குட்பட்ட நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (58)

★ ★ ★ ★

நாளை நடைபெறவிருந்த யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் நாளைமறுதினம் பி.ப 1.30 மணிக்கு நடைபெறுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

★ ★ ★ ★

யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க.செல்வக்குமரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் சி.திருவாகரன் பிரதமவிருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.(69)

# நியூஸிலாந்துக்கெதிரான முதல் டெஸ்ட்; வலுவான நிலையில் தென்னாபிரிக்கா!



ஜக்கலிஸ்

(ஹமில்டன்)

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று ஹமிலடனில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அணித்தலைவர் ஸ்மித், கிப்ஸ் இருவரும் களமிறங்கினர்.

இவர்கள் இருவரும் ஆரம்ப இணைப்பாட்டமாக 51 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஸ்மித் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் அணி மேலும் 28 ஓட்டங்களைப் பெற்றநிலையில் கிப்ஸ் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஜோடி சேர்ந்த ஜக்கலிஸ், றுடோல்ப் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடி அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர். கலிஸ் செஞ்சரி அடிப்பார் என எதிர்பார்த்தபோதும், 92 ஓட்டங்களுடனும், றுடோல்ப் 72 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தற்போது ஹரி கிறிஸ்ரன் 31, போல் அடம்ஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் டானியல் விற்ரோறி 2, ஸ்ரைஸ் மற்றும் ஜேக்கப் ஓரம் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# விளையாட்டு

# 15 வருடங்களின் பின் இந்திய அணி பாகிஸ்தானுக்கு நேற்றுச் சென்றது!

பாகிஸ்தானில் ஐந்து வார கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு கங்கூலி தலைமையிலான இந்திய



கிரிக்கெட் அணி கடந்த 15 வருடங்களின் பின் நேற்று பாகிஸ்தானுக்குச் சென்றது.

இவ்வாறு சென்ற இந்திய அணி, பாகிஸ்தான் அணியுடன் 5 ஒருநாள் போட்டித் தொடரிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

விசேட விமானம் மூலம் பாகிஸ்தான் லாகூரிலுள்ள அலாமா இக்பால் விமானநிலையம் சென்ற இவர்களுக்கு பாகிஸ்தான் படையினர் பலத்த பாதுகாப்பு அளித்திருந்தனர்.

பாகிஸ்தான் புறப்படுவதற்கு முன்னர் கங்கூலி தலைமையிலான இந்திய அணியினர் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர். இதன்போது பிரதமர் வாஜ்பாய் இந்திய அணி பாகிஸ்தானில் வென்று வரவேண்டும் என்றுஎழுதிய வாசகத்துடன்கூடிய துடுப்பு மட்டை ஒன்றை அணித்தலைவர் கங்கூலியிடம் கையளித்தார்.

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய அணி இன்று பயிற்சி ஆட்டத்



திலும் நாளைமறுதினம் பாகிஸ்தான் அணியுடன் முதல் ஒருநாள் போட்டியிலும் ஆடவுள்ளது.

# பொன் அணிகளின் போர்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகள் போர் என வர்ணிக்கப்படும் சென்பற்றிக்ஸ்கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான பெரும் கிரிக்கட் போட்டி நாளையும், நாளை மறுதினமும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)

# தெலுங்குதேசம் கட்சியிலிருந்து நடிகை ஜெயப்பிரதா விலகல்

(புதுடெல்கி)

தெலுங்கு தேசம் கட்சியில் இருந்து விலகிய நடிகை ஜெயப்பிரதா நேற்றுமுன்தினம் சமாஜ்வாதிக் கட்சியில் சேர்ந்தார்.

நடக்கவிருக்கும் நடாளுமன்றத் தேர்தலில் மக்களைக் கவர அரசியல் கட்சிகள், நடிகர் நடிகைகளை தங்கள் பக்கம் இழுத்து வருகின்றன. பாரதீய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சிகள் போட்டிபோட்டு செயற்படுகின்றன.

இதன்படி நேற்று முன்தினம் நடிகர் மனோஜ்குமார் பாரதீய ஜனதாவில் சேர்ந்தார்.

தமிழ், தெலுங்கு படங்களில் நடித்துள்ள ஜெயப்பிரதா உத்தரப்பிரதேச மாநில முதல் மந்திரியும், சமாஜ்வாதிக்கட்சித் தலைவருமான முலாயம்சிங் யாதவ் முன்பு சமாஜ்வாதிக்கட்சியில் நேற்றுமுன்தினம் சேர்ந்தார்.

இவர் ஏற்கனவே தெலுங்கு தேசம் கட்சியில் இருந்தார். அந்தக் கட்சி சார்பில் டெல்கி மேல்சபை உறுப்பினராக ஆனார். அவரது பதவிக் காலம் முடிந்து விட்டது.

லக்னோவில் நடந்த சமாஜ்வாதி கட்சி ஊழியர் கூட்டத்தில் ஜெயப்பிரதா பங்கேற்றார். கூட்டத்தில் அவர் பேசியதாவது.

இந்தியா முன்னேறவேண்டும் என்றால், முதலில் உத்தரப்பிரதேச மாநிலம் முன்னேற்றம் அடைய வேண்டும். இந்த முன்னேற்றம் முலாயம்சிங் ஆட்சியில்தான் கிடைக்கும்.

எனவே நான் தெலுங்கு தேசம் கட்சியில் இருந்து விலகிவிட்டேன். முலாயம்சிங்கின் சீரான தலைமையில் இயங்கி இந்த நாடு முன்னேற வழிசெய்வேன்.

தேர்தலில் வெற்றிபெற தொண்டர்கள் கடுமையாக உழைக்கவேண்டும். நானும் சாதராண தொண்டனாக செயற்படுவேன். எந்த ஒரு பதவி ஆசையும் எனக்கில்லை. இவ்வாறு ஜெயப்பிரதா கூறினார்.

கூட்டத்தில் சமாஜ்வாதிக்கட்சி பொதுச்செயலாளர் அமர் சிங் பேசுகையில், தேசிய அரசியல் கட்சிகள் நடிகர், நடிகைகளை பிரசாரம் செய்ய தங்கள் பக்கம் இழுத்துவருவதற்கு கண்டனம் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் - ஜெயப்பிரதா நடிகை என்ற முறையில் எங்கள் கட்சியில் சேரவில்லை. அவர் அரசியல் பாரம்பரியம் மிக்கவர். தெலுங்கு தேசம் கட்சியை உருவாக்கிய என்.டி.ராமராவுடன் சேர்ந்து அரசியல் நடத்தியவர். எம்.பியாகவும் பணியாற்றி இருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

## நான்கு கட்டங்களாக நடைபெறவிருந்த

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 5 கட்டங்களாக மாற்றப்பட்டது!

4 கட்டமாக நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் 5 கட்ட தேர்தலாக மாற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் 20, 22, 26, மே 5 மற்றும் மே 10 ஆகிய திகதிகளில் 5 கட்டமாக தேர்தல் நடத்த தேர்தல் கமிஷன் முடிவுசெய்துள்ளது. இந்த முடிவுக்கு மத்திய மந்திரிசபை நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்தது.

தேர்தல் பற்றி அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிடுவதற்காக ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு 5 கட்ட திகதிகள் குறித்து பரிந்துரையை மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது. மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்தத் தகவலை நிருபர்களிடம் வெளியிட்டார்.

ஏப்ரல் 20, 26, மே 5 மற்றும் 10 ஆகிய திகதிகளில் 4 கட்டமாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது என தேர்தல் கமிஷன் முதலில் முடிவுசெய்து அறிவித்திருந்தது. அதன்படி திரிபுரா மாநிலத்தில் ஏப்ரல் 20 இல் தேர்தல் நடைபெறுவதாக இருந்தது.

அன்று மலைவாசிகளின் முக்கிய திருவிழா நாள் என்பதால், தேர்தல் திகதியை மாற்றியமைக்கும்படி திரிபுரா அரசு கோரிக்கை விடுத்திருந்தது. அதை ஏற்று திரிபுராவில் ஏப்ரல் 22 ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல் கமிஷன் முடிவு செய்தது. இதனால் 4 கட்ட தேர்தல் 5 கட்ட தேர்தலாக மாற்றியமைக்கப்பட்டது.

5 கட்டத் தேர்தல் குறித்து அனுப்பிவைக்கப்பட்ட மத்திய மந்திரிசபையின் பரிந்துரையை ஏற்று நாடாளு மன்றத் தேர்தலுக்கான அதிகாரபூர்வ அறிவிப்பை ஜனாதிபதி அப்துல்கலாம் விரைவில் வெளியிடுவார்.

இதற்கிடையில் பருவமழையை கருத்திற்கொண்டு - அந்தமான், நிக்கோபார் தீவுகளில் தேர்தலை முன்கூட்டியே நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டன. அதைத் தொடர்ந்து அந்தமானில் மே 10 ஆம் திகதிக்குப் பதிலாக ஏப்ரல் 20 ஆம் திகதி அன்று தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் - பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில் - நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு 'சனாதன தர்மம்' என்னும் விடயம் தொடர்பாகச் சுவாமி பிரபாகானந்த சரஸ்வதி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

### பங்குனிப் பொங்கல் விழா

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு அருமிள்கு பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனிப் பொங்கல் விழா - எதிர்வரும் 15,22,29 ஆம் திகதிகளிலும், அடுத்த மாதம் 5,12 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. இதற்காக ஆலயத்தை அண்டியுள்ள பகுதிகள் யாவும் துப்புரவு செய்யப்பட்டு, அடியார்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் தினங்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும், தனியார் சிற்றூர்த்திச் சங்கத்தினரும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளனர்.(24)

# தமிழர்களின் ஒற்றுமையை உணர்த்தியே கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுகிறது

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(மட்டுவில்)

நாங்கள் பதவிகளுக்கோ, பட்டங்களுக்கோ, சொகுசு வாழக்கைக்கோ ஆசைப்பட்டவர்களல்லர். இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் நாம் வாகனங்களில் இங்கு உலாவருகின்றோம். இந்திய இராணுவக் காலத்திலும், பின்னர் இலங்கை இராணுவத்தின் காலத்திலும் நாம் கால்களில் செருப்புக்கூட இல்லாது கொழுத்தும் வெயிலிலும், முட்கள், கற்கள் நிறைந்த பாதைகளிலும் நடைபயின்றவர்கள் தாம் நாங்கள். இவ்வாறு - நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக்கு அம்பாள் சனசமுகநிலைய முன்றலில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளருமான பாப்பா தெரிவித்தார்.

எம்மைப் பொறுத்தவரை நாம் சண்டைக்கும் தயார், சமாதானத்துக்கும் தயார். சண்டையா, சமாதானமா வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது மக்களே. எம் மண்ணில் நடைபெற்ற தேர்தல்கள் பலவற்றை குழப்பிய நாம், இன்று தேர்தலுக்கு ஆதரவாகப் பேசுகின்றோம் என்றார். அதற்குக் காரணம் உண்டு. தமிழனுக்கு என்று ஒரு இராணுவ பலம் உண்டு. அதேபோல ஒரு அரசியல் பலமும் வேண்டும். அப்போதுதான் சிங்கள தேச நடாளுமன்றத்திலும், உலகிலும் எமது குறைகள், தேவைப்பாடுகள் முழங்கும். அரசியல் பலமும் இராணுவபலமும் ஒன்றிணையும்போது - எமது விடுதலை நிச்சயம்.

இதற்காகவே நான்கு கட்சிகள் ஒன்றாக அமைத்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - தமிழரின் ஒற்றுமையையும், தேசியத்தையும் உணர்த்தி, முதன்மைப்படுத்தி, தேர்தல் களத்தில் குதித்துள்ளது. தமிழர்கள் ஒன்றிணைந்து ஒரேகட்டுக் கோப்பின்கீழ் அணிதிரளுவதை விரும்பாத சிங்களப்பேரினவாதம்- அவர்களைப் பிரிப்பதற்கு முயற்சி செய்கின்றது. நாங்கள் நினைத்திருந்தால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மூன்று அமைச்சர் பதவிகளைப்பெற்று, தமிழ்மக்களுக்கு வாரிவழங்கியிருக்கமுடியும். அமைச்சர் மகேஸ்வரன் - சிங்களக் கட்சி மூலம் போட்டியிட்டு வென்றாலும், இயலுமானவரை எம்மக்களுக்கு உதவி செய்தார். அதேபோல, இன்று தமிழரின் ஒற்றுமையைக் கண்டு இந்தத் தேர்தலில் - இங்கு போட்டியிடுவதிலிருந்து விலகி, கொழும்பில் போட்டியிடுகின்றார்.

எனவே, எனது மதிப்பிற்குரிய மக்களே உங்களுக்கு நிரந்தர சமாதானம் தேவையெனில், நேரடியாக வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்று வீட்டிற்கு நேரே புள்ளடியிட்டு, திரும்பி வீட்டுக்கு வாருங்கள். எக்காரணம் கொண்டும் உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தாது விடாதீர்கள், அது மோசடிகளுக்கு வழிவகுக்கும் என்றார். அங்கு தொடர்ந்து தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட - போராட்டச் சூழலைச் சித்தரிக்கும் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. (24)

## சின்னஞ்சிறு செய்திகள்

### தலைமைத்துவ பயிற்சி

(சுதுமலை)

கியுடெக் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி - நான்கு நாட்கள் வெவ்வேறு இடங்களில் இடம்பெறவுள்ளன. இந்தப் பயிற்சியானது - எதிர்வரும் 18 ஆம் திகதி குடத்தனையிலும், 20 ஆம் திகதி சாவற்கட்டுப் பகுதியிலும், 21, 24 ஆம் திகதி அல்லைப்பிட்டி மற்றும் தெல்லிப்பளையிலும் இடம்பெறவுள்ளது. (91)

### தென்மராட்சியில் புதிய காவலரண்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியின் பல இடங்களிலும் பரவலாக படையினர் புதிய காவலரண்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

சாவகச்சேரி, சங்கத்தானை, மீசாலை, கொடிகாமம் ஆகிய இடங்களிலேயே படையினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர்.

அத்துடன், உள்ளூர் வீதிகளிலும் 24 நேரமும் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். (34)

# வலி.வடக்குப் பாடசாலைகளில் ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசாரம்

வலிகாமம் வடக்குப் பகுதியிலே ஈ.பி.டி.பியினர் பாடசாலைகளுக்குச் சென்று - ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலே தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்புடன் வாகனங்களில் வரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் - பாடசாலை வகுப்பறைகளுக்குள் சென்று, தமது தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதுடன், தமக்கு வாக்கு வழங்குமாறு கோரியும் வருகின்றனர்.

மாணவர்களிடம் தங்களது பெற்றோர்களிடம் தமக்கே வாக்களிக்கும்படி வற்புறுத்துமாறும் ஈ.பி.டி.பியினர் கேட்டுவருகின்றனர். இதற்காகத் தாம் ஆட்சிக்கு வந்தால், மாணவர்களுக்குப் பல உதவிகளைச் செய்யவுள்ளதாகக் கூறிவருகின்றனர்.

இந்தப் பிரசாரப் பணிகளின் போது விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் எதிரான கருத்துக்களும் பேசப்பட்டு வருகின்றன.

இதேபோன்று, மல்லாகத்திலுள்ள ஈ.பி.டி.பியினரின் முகாம் மதில்களில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகளைப் பொலிஸார் அகற்றினர். இவை அகற்றப்பட்ட மறுநாளே மீண்டும் புதிய சுவரொட்டிகள் ஈ.பி.டி.பியினரால் ஒட்டப்பட்டுள்ளன. (94)

### கல்விசார் போட்டிகள்

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக மன்றத்தினால் நடாத்தப்படும் - பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கல்விசார் போட்டிகள் எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் இந்த சனசமூகமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# இயக்கச்சி பொதுசந்தையை இயக்க பிரதேசசபை நடவடிக்கை


(வடமராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இயக்கச்சிப் பொதுச்சந்தையை மீண்டும் இயங்குவதற்குப் பிரதேசசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால், முற்றாக அழிக்கப்பட்ட இந்தச் சந்தை, தற்போது பிரதேசசபையால் புனரமைக்கப்பட்டு வருகிறது. இது இன்னும் சில வாரங்களில் மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தப் பகுதி 2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதுடன், 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால், அவர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய - பளைச் சந்தைக்கோ அல்லது கிளிநொச்சி சந்தைக்கோ செல்லவேண்டியுள்ளது.

அந்தப் பகுதி மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பிரதேச சபை இந்தப் பொதுச்சந்தையை புனரமைப்புச் செய்துள்ளது. (17)



மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட சிசுஉதான சேமிப்பு அலகு மாணவ பிரதிநிதிகளுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வில் கலந்துகொண்ட - யாழ்.பிராந்தி சிசுஉதான இணைப்பாளர் ம.சிவச்சந்திரநேசன் மாணவப்பிரதிநிதி ஒருவருக்கு சின்னஞ்சூட்டுவதைப் படத்தில் காணலாம். (116)



சமுர்த்தி அதிகாரசபை சந்தைப்படுத்தல் பிரிவினரால், தும்பளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள - செ.சின்னராசா என்பவருக்கு பருத்தித்துறை பிரதேசசெயலர் சிவசுவாமி - நடமாடும் சிற்றுண்டி விற்பனை வண்டிலை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்த வினாவிடைப் போட்டிகளுக்கு ஏற்பாடு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கணித, விஞ்ஞான அறிவை மேம்படுத்த விஞ்ஞான வினாவிடைப் போட்டி நிகழ்ச்சியொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை - மாகாணக்கல்வித் திணைக்களத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இந்தவருடம் இரண்டாம் தவணைக் காலத்தில் பாடசாலை, கோட்ட மற்றும் வலயமட்டப்போட்டிகள் நடத்தப்பட்டு, ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.வேதநாயகம் தெரிவித்தார். தரம் 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்பு மாணவர்களிடையில் இந்தப் போட்டி நிகழ்வுகள் ஒருங்கமைக்கப்பட்டுள்ளன.

எளிய வசனநடையில் ஒரு சொல் அல்லது ஒரு இலக்கத்தில் விடைகள் அமையத்தக்கவிதத்தில் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கணித, விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு - வெற்றிக் கிண்ணங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும் எனவும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை அண்மையிலுள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

செ.பத்மாவதி (கிளிநொச்சி), ஞா.மகேஸ்வரி (சாவகச்சேரி), ஐ.சுபாசினி (கோண்டாவில் கிழக்கு), லிங்கராசா தமிழகம் (வல்வெட்டித்துறை), ப.வேலும்மயிலும் (வல்வெட்டித்துறை), அ.ரேணுகா (கொக்குவில்), வின்சன் விமலதாஸ் (யாழ்ப்பாணம்), வி.அன்னமேரி (குருநகர்), த.சரஸ்வதியம்மா (மண்டைதீவு), க.பரம்சோதி (கரணவாய்), சு.கனகரத்தினம் (புத்தூர்), மு.சோதிப்பிள்ளை (நீர்வேலி), மகேசன் (மல்லாகம்), கஜராகவன் (அளவெட்டி), ந.கந்தசாமி (பருத்தித்துறை), க.சின்னக்கிளி (பொலிகண்டி), ஜெ.லோஜி (குருநகர்), அ.இலங்கரத்தினம் (யாழ். போதனா வைத்தியசாலை), க.நாகராசா (மாதகல்), ப.குணசேகரம் (யாழ்ப்பாணம்), சி.காசிநாதர் (சுன்னாகம்), ஐ.சுகந்தினி (சுன்னாகம்), மா.மதுரநாயகம் (இணுவில்), பெ.மரியதாஸ் (யாழ்ப்பாணம்), வி.கிருஸ்ணகுமார் (பருத்தித்துறை), ரா.ராஜேஸ்வரி (நல்லூர்).

# இனம் தெரியாத குழுவினரின் தாக்குதலில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் குடியிருப்புப் பகுதியியுள்ள வீடொன்றினுள் இனந்தெரியாத குழுவொன்று உட்புகுந்து, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை அடித்து நொருக்கியதுடன், உரிமையாளரையும் பலமாகத் தாக்கினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தின்போது - நசீன் (வயது 36) என்பவர் தாக்கப்பட்டு, படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இரவுவேளை மதுபோதையில் கத்தி, வாள்களுடன் வந்த இளைஞர்குழுவொன்று - முஸ்லிம்கள் வசிக்கும் வீதிகளில் உள்ளவர்களுடன் முரண்பட்டு, நசீன் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கியது. சத்தம் கேட்டு வாகன உரிமையாளர் வெளியே வந்து பார்த்தபோது - அவரையும் தடியால் பலமாகத் தாக்கிக் காயப்படுத்தினர். இதைவிட, வாகனத்தினுள் இருந்த கையடக்கத் தொலைபேசி, சிறு தொகைப் பணம் என்பவற்றையும் இவர்கள் திருடிச்சென்றுள்ளனர்.





# இன்றைய இளைஞர்கள் தொழில் தேவையை கருத்தில் கொள்வதில்லை

தட்டாதெரு சந்திக்கு அருகாமையில் தையல் கடையினை நடத்திவரும் குணசேகரம் அருண் என்பவரை சந்தித்து அவரது தொழில் சம்பந்தமாகவும், அதில் ஏற்பட்ட அனுபவம், இலாப நட்டங்களையும் பகிர்ந்துகொண்டேன்.

அருண் சொல்லும்போது, - கொக்குவில் மேற்கு அம்பாள் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் வசித்து வருகின்றேன். பல தரப்பட்ட தொழில்களை மேற்கொண்டு ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான பாதிப்பினைத் தந்தது. இதற்குக் காரணம் யுத்தமும், இடப்பெயர்வும் ஆகும். கல்வி பயின்ற காலங்களும் தொடர்ந்து படிக்க முடியாத நிலையும் - வேலைகளை செய்வதற்கு இறங்கி, தொடர்ந்தும் வேலை செய்யமுடியாதநிலையும் கூடுதலாக என் வாழ்வில் இடம்பெற்றன.

நான் 9 ஆம் வகுப்பு படிக்கின்றவேளையில் தையல்



பயிற்சியினை மேற்கொண்டேன். ஒரே வருடத்தில் தையல் முறைகளைக் கற்றுக்கொண்டும், படித்துக்கொண்டும் 1992 ஆம் ஆண்டு O/L பரீட்சை எடுத்தேன். சித்தியடைந்து 1994 ஆம் அண்டு A/L விஞ்ஞான பாடத்தினைப் படித்தேன். பல்கலைக்கழகம் செல்வதற்கான மதிப்பெண் குறைந்ததால் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான வாய்ப்பு கிடையாமற்போனது. பின்பு ஆங்கில அறிவுவேண்டும் என்பதற்காக ஆங்கிலம் படித்தேன். இந்தக் காலப்பகுதியில் இடப்பெயர்வு ஏற்பட்டது. சாவகச்சேரி சென்று தெரியாதவர் ஒருவருடைய வீட்டில் இருந்ததால், அன்றாடம் செலவிற்கு பணம் இருக்கவில்லை. ஏதாவது ஒரு தொழில் செய்தாவது பிழைக்க வேண்டும் என்று எண்ணி தொழிலில் இறங்கினேன்.

கிளாலி வழியே இங்கிருந்து பல மலிவான பொருட்களைக் கொண்டுசென்று வன்னியில் விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் வன்னியில் இருந்து மலிவான பொருட்களை வாங்கி வந்து விற்பதுமாகச் செயற்பட்டேன். இப்படியாகக் கிளாலி வழியூடாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு போய்வரும்போது, பல கஷ்ரங்களை அனுபவித்திருக்கின்றேன். ஒருநாள் நடுச்சாமம் நடுக்கடலில் படகில் வந்துகொண்டிருந்தபோது, தவறி தண்ணீரில் வீழ்ந்து நீந்தத்தெரியாமல் மூழ்கிக் கொண்டிருந்தபோது, படகில் வந்த ஒருவர் என்னைக் காப்பாற்றினார். அன்றிலிருந்து அந்தத் தொழிலினைக் கைவிட்டேன்.

வெளிநாட்டு மோகம் எனக்கும் ஏற்பட்டது. பல இளைஞர்கள் வெளிநாடு சென்று வசதியோடு இருக்கின்றார்கள் என்று நண்பர்கள் சொல்லும்போது, நானும் வெளிநாடு செல்ல வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. நானும் வெளிநாடு செல்வதற்காகக் கொழும்புக்குச் சென்றேன். அங்கே என்னைப் போல பல இளைஞர்கள் லொச்சில் தங்கிக்கொண்டிருந்தனர். அவர்களும் வெளிநாட்டுக்குச் செல்வதற்காக வந்திருந்தார்கள். ஒரு வருடம்தான் கொழும்பில் இருக்கமுடிந்தது. அந்த ஒரு வருடத்தில் நான்பட்ட கஷ்டங்கள் சொல்லிலடங்காது. நாளை போகலாம், வருகின்ற மாதம் கண்டிப்பாக அனுப்புவார்கள் என்று ஏஜென்சியும் என்னைப் பேக்காட்ட, நாளும் நகர்ந்தது. கையில் செலவுக்கு வைத்திருந்த பணமும் முடிந்தது. இனியும் வெளிநாடு செல்வதற்காக அங்கே நின்றால் என் வாழ்வும் பூச்சியமாகிவிடும் என்று எண்ணிக் கப்பலில் யாழ்ப்பாணம் வந்தேன்.

பணம் சம்பாதிக்க நினைத்து ஊரிலேயே உழைக்க முடியாமல் வெளிநாடு செல்வதால் தனது தங்கச்சி, அக்காவிற்கு சீதனம் கொடுக்கமுடியும் என்று எண்ணி பல இளைஞர்கள் கொழும்புக்குச் சென்று, பல கஷ்டங்களில் தாங்களாகவே மாட்டிவிடுகின்றார்கள். இழந்ததை மீட்பதற்காகச் சென்று இடைநடுவே மீதியானவற்றையும் இழந்தும், ஏஜென்சியிடம் பணத்தை பறிகொடுத்தும் திரும்பி வந்துள்ளேன்.

ஆங்கிலம் படித்ததினால், தனியான நிலையம் ஒன்றினை ஆரம்பித்து நான்கு வருடங்கள் ஆங்கிலம் படிப்பித்தேன். ஆனாலும், அதில் எனக்கு திருப்தி ஏற்படவில்லை. ஏனெனில், மாணவர்கள் குறைவாகவே வந்தார்கள். ஒரு நிலையான தொழில் ஒன்றினை மேற்கொள்ளவேண்டும் என்று நினைத்து - பல அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பித்தேன். அதாவது கிராம சேவகர் உத்தியோகர் பரீட்சை எழுதினேன்.

மதிப்பெண் குறைந்ததனால், எனக்கு வேலை கிடைக்கவில்லை. பின்பு மருத்துவதாதி வேலைக்கு விண்ணப்பித்தேன். அதுவும் கிடைக்கவில்லை. பேருந்து ரிக்கெட் பரிசோதகர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். அதில் எனக்கு கிடைக்க வேண்டிய வேலையை யாரோ லஞ்சம் கொடுத்து வாங்கிவிட்டார். இப்படியாக வேலை வேலையென்று ஏதாவது ஒரு வேலை செய்யவேண்டுமென எண்ணி, எல்லா வேலைகளுக்கும் விண்ணப்பித்து, சில காரணங்களுக்காக எனக்குக் கிடைக்காமல் போனது. அதிலிருந்து இனிமேல் எந்த வேலைக்கும் விண்ணப்பிக்காமல் நானே ஒரு தொழிலினை மேற்கொள்ள வேண்டியதுதான். என்று நினைத்து, தையல் கடை ஒன்றினைத் திறந்தேன்.



தையல் கடையினைத் திறந்த நாட்களில் வாடிக்கையாளர்கள் குறைவாகத்தான் வந்தனர். நாட்கள் செல்லச் செல்ல எனது தையல் திறமையினைப் பார்த்து நிறையப் பேர்கள் வர ஆரம்பித்தார்கள். இளைஞர்களுக்குத் தேவையான வகையில் நவீன உடைகளை தைக்கின்றபோது, ஆண்களுக்கான உடைகள் தைப்பதற்காக நிறைய வேலைகள் வந்தவண்ணமே உள்ளன. இரவு பகல் என்றில்லாமல் தொழிலில் ஈடுபட்டேன். இதனால் நல்ல இலாபத்தினை அடைந்தேன். முதலில் ஒரு தையல் இயந்திரத்தினைக் கொண்டு தொழிலில் ஈடுபட்டேன். அதுவும் கடன்பட்டுத்தான் ஆரம்பித்தேன். இன்று ஆறு தையல் இயந்திரங்களை வாங்கியிருக்கின்றேன். அடுத்ததாக எனது தங்கச்சியை கரைசேர்த்திருக்கின்றேன்.


அரசாங்கத் தொழில் வேண்டும் என்று நினைத்து காத்திருந்தால், என்னில் இவ்வளவு மாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. இன்றைய காலத்து இளைஞர்கள் ஊழியத்தினைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். வேலைகளைத் திறமையாகச் செய்ய முற்படுவதில்லை. ஆர்வம் இல்லாமல் இருக்கின்றார்கள். வேலை பழக வருகின்றவர்களும் சம்பளத்தினை எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

வாழ்க்கைக்கு ஒரு தொழில் தேவை என்பதனை இன்றைய காலத்து இளைஞர்கள் கருத்தில் கொள்வதில்லை. வெளிநாட்டில் இருக்கின்ற அண்ணணோ, தம்பியோ, அப்பாவோ செலவுக்காக அதிக பணம் அனுப்புவதால், பணத்தின் பெறுமதி தெரியவில்லை. அங்கே அவர்கள் படும் கஷ்ரங்களை இங்கே இருக்கின்ற இளைஞர்கள் அறிந்தவராக இருப்பின், தாங்களும் ஒரு தொழிலினை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும்.

என்னிடம் வேலைக்கு வருபவர்கள் இடையில் விட்டுவிட்டு சென்றுவிடுவார்கள். பழக வருபவர்களும் பொறுமையினை இழந்து சென்றுவிடுவார்கள். யுத்தம் நடந்த காலப்பகுதிகளில் கறுப்பு நிற பச்சைநிற துணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், இந்த இரண்டு நிற துணிளும் விலை அதிகமாக விற்கப்பட்டது. ஆனால் இப்பொழுது இந்த இரண்டு நிற துணிகளும் இங்கே மலிவாக விற்பனைக்கு வந்துள்ளதால், நிறைய வேலை வருகின்றன. அன்றைய காலத்தில் கடன்பட்டு பணத்தினை எடுத்து முதலீடுசெய்வது என்பது பயமாக இருக்கும். ஏனெனில், இடப்பெயர்வுகள் காரணமாக அமைந்ததினால், தொழிலை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இன்றைய சமாதான காலத்தில் தொடர்ந்து தொழிலினை மேற்கொள்ள வசதியாக உள்ளது.

**நேர்காணல் - செல்வா**

# காகித அட்டை தயார் செய்தல்



காகித அட்டைகள் இன்று பல்வேறு வகையான தொழிலகளுக்கான துணைப்பொருளாகவும் உள்ளது. பல்வேறு சாமான்களை அடைத்து விற்பதற்கு அட்டைப்பெட்டிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

இனிப்புப் பலகாரங்க்ளை வாங்கினால், அட்டைப் பெட்டியில் அவற்ஂறை அடைத்துத் தருவருவதைப் பார்க்கமுடிகிறது.

பெரிய ஜவுளிக் கடைகளில் அட்டைப் பெட்டிகளில் பட்டுப் புடவை போன்றவற்றை வைத்துக் தருகிறார்கள்.

புத்தக பைண்டிங் செய்வதற்கு அட்டை தேவைப்படுகிறது. புததகப் பதிப்பர்ளர்களும் தங்கள் தயாரிப்பான நூல்களுக்கு அட்டைளைப் பயன்படுத்துகிறார்கள்.

பெரிய பெரிய கணக்கு நோட்டு புத்தகங்களைத தயாரிக்கும்போது, கனமான அட்டைகளைப் பயன்படுத்துவது நாம் அறிந்ததே.

பள்ளி மாணவர்கள் உபயோகிக்கும் தடித்த நோட்டுப் புத்தங்களுக்கு அட்டை போட்டு பைண்ட் செய்யப்படுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகள் பரீட்சை எழுதும்போது தாள்களை வைத்து எழுதுவதற்கு தடித்த அட்டைகளைப் பயன் படுத்துகிறார்கள்.

இன்னும் எத்தனையோ வகைகளில் அட்டைகள் இன்று வாழ்க்கைக்குப் பயன்படுகின்றன. சாதாரண அட்டை தயாரிப்பில் நல்ல அனுபவம் ஏற்பட்ட பிறகு, மிகவும் தரமான மெல்லிய அட்டைகளை தயார்செய்ய முயற்சிக்கலாம்.

தக்கமுறையில் உற்சாகத்துடன் இந்தத் தொழிலில் ஈடுபட்டால், இது நல்ல வருவாய் தரக்கூடிய சிறந்தவொரு தொழிலாகவே இருக்கும்.

இப்போது அட்டைகள் தயாரிப்பதற்காக ஒரு அடிப்படை முறையை இங்கே அறிமுகப்படுத்துகிறோம்.

இம்மாதிரி அட்டைகளைத் தயாரிப்பதில் பெற்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு, நீங்களாகவே முயன்று மேலும் தரமான அட்டைகளைத் தயாரிக்க முயற்சிக்கலாம்.

அட்டைத் தயாரிப்புக்கு தேவைப்படும் மூலப்பொருட்கள் பின்வருமாறு-

பழைய கிழிந்துபோன அட்டைகள், 1 கிலோ காகிதங்கள், 1 கிலோ வெந்தயம், தேவையான அளவு நீர்,

இவைதான் முக்கியமான மூலப்பொருட்கள். அட்டைத் தயாரிப்புக்கு சில சாதனங்கள் தேவைப்படும். அவற்றையும் செய்துகொள்ளவேண்டும். முக்கியமாக காகிதத்துண்டுகள், பழைய அட்டைகளை ஊறப்போட ஒரு மரத்தொட்டி தேவைப் படும். ஊறிய காகிதத்துண்டுகள், அட்டைகளை அரைப்பதற்காக ஒரு அரவைக்கல்லையும் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

மரம் அல்லது இரும்பாலான கரண்டி தேவைப்படும். வாய் அகலமாகவுள்ள ஒரு பெரிய பாத்திரமும் வேண்டும். பிறகு கொஞ்சம் சாக்கு அல்லது பழைய துணியை எடுத்துக்கொள்ள வேண்டும். வழுவழுப்பான கூழாங்கல் ஒன்றும் வேண்டும். தோசை சுட்டு எடுக்கப்பயன்படுத்துவது போன்ற தட்டையான கரண்டியொன்றும், விளக்கெண்ணையும் தேவைப்படும்.

இனி அட்டை தயாரிக்கும் முறையினைக் கவனிப்போம்.

சேகரித்து வைத்திருக்கும் பழைய காகிதங்கள், அட்டைகள் போன்றவற்றை முதலில் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். கல், மண், தூசு போன்றவை இருக்கக்கூடாது.

பின்னர் அந்தக் காகிதம், அட்டைகளைத் துண்டுதுண்டாகக் கிழிக்கவேண்டும். மரத்தொட்டியில் தண்ணீர் நிரப்பி, அதில் காகிதத் துண்டுகளைப் போட்டு, துண்டுகளெல்லாம் நீரில் மூழ்குமாறு செய்து ஊறவைக்கவேண்டும். குறைந்த பட்சம் காகிதத்துண்டுகள் இரண்டு நாட்கள் ஊறவேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் ஊறச்செய்தால், அதனைப் பின்னால் அரைப்பதற்கு வசதியாக இருக்கும். மறுநாள் காகிதத் துண்டு ஊறும் நீரில் வெந்தயத்தையும் சேர்த்து ஊறவிட வேண்டும்.

ஊறவைத்த வெந்தயத்தை அரைவைக் அம்மிக் கல்லில் போட்டு நன்றாக அரைக்கவேண்டும். அரைக்கும்போது, அடிக்கடி வடித்த கஞ்சியை ஊற்றி அரைத்தால், அட்டை மிகவும் உறுதியாக இருக்கும்.

நன்றாக கூழ்போல பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பழைய துணி அல்லது சுத்தமான சாக்கை எந்தளவுக்கு அட்டையைத் தயாரிக்க விரும்புகிறோமே, அந்தளவிற்கு சுத்தமாகக் கிழித்துக்கொள்ளவேண்டும்.

அந்தத் துணியின் மீது எந்தளவிற்கு அட்டையின் கனம் இருக்கவேண்டுமெனக் கருதுகிறோமே, அந்தளவிற்கு காகிதக் கூழைக் கரண்டியால் எடுத்துப் பரப்பிவிடவேண்டும்.

அட்டையின் கனம் ஒரே சீராக இருக்குமாறு கரண்டியால் கூழை நிரவச்செய்துவிடுவது முக்கியம்.

இரண்டொரு நாட்கள் கழிந்தபிறகு பரப்பிவைக்கப்பட்டிருக்கும் கூழ் கெட்டியான பதமாக மாறும் சமயம் - ஒரு தட்டையான கரண்டியைக் கொண்டு, விளக்கெண்ணையை எடுத்துப் பரப்பி, காயவைத்திருக்கும் கூழின் மேற்பரப்பில் நன்றாகத் தடவி விடவேண்டும்.

அவ்வாறு தடவும்போது, அட்டையின் மேற்புறம் கரடுமுரடாக இல்லாமலும், கனவளவு ஒரே சீராக இருக்குமாறும் ஒழுங்குபடுத்தவேண்டும். மேற்புறத்தை பளபளப்பாக ஆக்க உருண்டையான கூழாங்கல்லை உருட்டி சமப்படுத்தலாம்.

இரண்டொரு நாட்களுக்குப் பின்பு, அட்டையை அப்படியே துணி அல்லது சாக்குடன் சேர்தெடுத்து, தொங்கவிட்டு காயச் செய்யவேண்டும். எதிர் பார்க்குமளவிற்கு அட்டை காய்ந்துவிட்டதாகத் தெரிந்தபின், அதன் அடிப்பகுதியில் உள்ள துணி அல்லது சாக்கை அவதானமாக உரித்தெடுக்கவேண்டும்.

அட்டை ஒருவேளை சரிவரக்காயாமல் இருந்தால், துண்டு துண்டாக உடைந்தோ கெட்டுவிடக்கூடும். அட்டைகளை துணிகளிலிருந்து பிரித்தெடுத்தபிறகு, வழுவழுப்பான கூழாங்கல்லைக் கொண்டு அடடையில் சிறிது நீர் தெளித்துத் தேய்க்க வேண்டும்.

பின்னர் உலர்ந்ததும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, அவற்றின்மீது சமமாகக் கல் அல்லது இரும்புப் பலகைபோன்ற ஏதாவது ஒன்றைத் தூக்கி வைக்கவேண்டும். இவ்வாறு செய்வதினால் சமமாகவும், சுருக்கமில்லாமலும் அட்டைகள் இருக்கும்.

# சின்ன வெங்காயம் மற்றும் பம்பாய் வெங்காயம் என்பவற்றின் உற்பத்தி

வெங்காயம் பெறுமதிமிக்க சிறு உணவுப் பண்டமாகும். சமீப காலம்வரை சின்ன வெங்காயப பயிர்ச்செய்கை பிரதானமாக யாழ்ப்பாண மாவட்டத்திலே செறிந்துகாணப்பட்டது. எனினும், வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக வெங்காயச் செய்கை புத்தளம், இரத்தினபுரி, பொலநறுவை, மொனராகலை போன்ற வேறுசில பிரதேசங்களுக்குப் பரவியுள்ளது. தற்போது நாட்டின் மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் 40 சதவீதத்தினை மட்டுமே யாழ்ப்பாண மாவட்டம் பங்களிப்புச் செய்கின்றது. பம்பாய் வெங்காயத்தைப் பொறுத்தவரையில் மாத்தளை மாவட்டம் மொத்த உற்பத்தியில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை உற்பத்தி செய்கிறது. மிகுதி புத்தளம், மொனராகலை, இரத்தினபுரி, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகவே சின்னவெங்காய உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த தசாப்த காலத்தில் சின்ன வெங்காயப் பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு இரட்டிப்பாயிருக்கிறது. ஆனால் இந்தக் காலப் பகுதியில் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்து சென்றிருக்கிறது.

வெங்காய உற்பத்தியிலும் பயிர்ச்செய்கைக்குக் கிடைக்கும் நிலப்பரப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி - நெல் உற்பத்திக்கு நீர் கிடைக்கக்கூடிய நிலையாகும். பயிர்ச்செய்கை பருவங்களின்போது, நெற்பயிர்செய்கைக்கு போதிய நீர்கிடைக்காத பட்சத்தில், விவசாயிகள் தமது வருமானத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகக் குறைந்த அளவில் நீர் தேவைப்படும் வெங்காயம் போன்ற உப உணவுப் பயிர்களைத் தமது நிலங்களில் பயிரிடுகிறார்கள்.

வெங்காய உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குப் பெருமளவு உள்ளார்ந்த ஆற்றல் காணப்படுகிறது. நாடு இப்பொழுது நெல் உற்பத்தியில் சுயதேவைப்பூர்த்தி நிலையை எட்டிவருவதாலும், நெல் உற்பத்தியில் இலாப எல்லை வீழ்ச்சியடைந்து வருகிறது என அண்மைய ஆய்வுகள் தெரிவித்திருப்பதனாலும் நெல் - விவசாயிகள், குறிப்பாக சிறு காணித்துண்டுகளை வைத்திருப்பவர்கள் காணி அலகொன்றுக்கு அதிக இலாபத்தை எடுத்துவரும் வெங்காயம் போன்ற சிறு உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு ஊக்குவிக்கப் படுதல் வேண்டும். வெங்காய உற்பத்தி அதிகரிப்பு, விவசாயிகளின் வருமான மட்டங்களை உயர்த்துவதுடன், குறிப்பாக பம்பாய் வெங்காயம் இறக்குமதியில் செலவிடப்படும் வெளிநாட்டுக்குச் செலாவணியைச் சேமிப்பதற்கும் உதவும்.

வெங்காய உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமான சில நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியம். உற்பத்தியாளர்களுக்கும் நுகரவோருக்கும் சாதகமான, சரியான சந்தைப்படுத்தல் கொள்கைகளை அமுல் செய்தல், காணி அலகொன்றுக்கான சராசரி விளைச்சலை விருத்தி செய்தல், உயர்தர வெங்காயத்தை உற்பத்திசெய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித்தல் போன்றன இந்த நடவடிக்கைகளாகும்.

உள்ளூர் பம்பாய் வெங்காய உற்பத்தியின் நீண்டகால அபிவிருத்தியைப் பாதுகாக்கும் நோக்குடன் இறக்குமதிக் கொள்கை அமுல் செய்யப்படுதல் அவசியமாகும். சரியான தருணத்தில் இறக்குமதி செய்வதன்மூலமும் உள்ளூர் சந்தையில் பொருத்தமான விலைகளில் விற்பனை செய்யும் வகையில் இறக்குமதி கொள்கைகளை சீராக்கிக்கொள்வதன்மூலமும் பம்பாய் வெங்காய இறக்குமதியின் பாதகமான விளைவுகள் குறைந்த மட்டத்தில் வைக்கப்படமுடியும். உள்ளூர் சந்தையில் நிலவும் இடைவெளியை நிரப்புவதற்காகச் சின்ன வெங்காயம் இறக்குமதிசெய்யப்பட்டபோதிலும், இறக்குமதி வெங்காயத்தின் விலை எப்பொழுதும் உள்ளூர் வெங்காயத்தின் விலையை விடவும் உயர்வாக இருந்து வந்திருப்பதனால், இது உள்ளூர் உற்பத்தியைப் பெருமளவில் பாதிக்கவில்லை

நெற்சந்தைப்படுத்தும் சபை பெருந்தொகையான சிறு உணவுப்பயிர்களை கொள்வனவு செய்வதற்காகத் தள விலைத்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது. ஆனால், இந்த திட்டத்தின் கீழான வெங்காய கொள்வனவு மிகச் சிறு அளவிலேயே நடைபெற்று வருகின்றது. விவசாயிகள் தமது சின்ன வெங்காய, பம்பாய் வெங்காய உற்பத்திகளை ஏனைய நிறுவனங்களுக்கும் தனியார் துறையினருக்கும் விற்பனைசெய்து வருகின்றனர். அநேகமாக இதற்குத் தள விலைகளிலும் பார்க்க உயர்விலைகள் வெளியில் கிடைப்பதே காரணமாக இருக்கலாம்.

இயல்பிலேயே சின்ன வெங்காயத்துக்குப் பிரத்தியேக வகையிலான களஞ்சிய வசதிகள் தேவை. இல்லாவிட்டால் அதனை ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே வைத்திருக்க முடியும். சின்ன வெங்காயத்தை நீண்டகாலத்துக்குப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளக்கூடிய நலல களஞ்சிய வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருந்தால், உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் விலைகளை அதிக தளம்பல்களின்றி ஒரே சீரானமட்டத்தில் வைத்திருப்பது சாத்தியமாகும். குறித்த ஒரு வருடத்தில் உற்பத்தியாளர்- விலைகள் குறைவாக இருந்தால், அடுத்த வருடத்தில் அவர்கள் தமது உற்பத்தியைக் குறைத்து விடுகிறார்கள். நீண்ட காலத்தில் உற்பத்தியாளர் விலைகளை அதிக தளம்பல்களின்றி பேணி வருவதானது தொடர்ந்து




வளர்ச்சியுடன்கூடிய உற்பத்தியைத் தொடர்வதற்கும், விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவும். களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் வெங்காயத்தை ஓர் ஒழுங்குமுறையில் சந்தைக்கு விடுவிப்பதன்மூலம் வெங்காயத்துக்கான நுகர்வோர் விலைகளை நீண்ட காலத்தில், அதாவது உற்பத்தி பருவத்திலும், உற்பத்தி நடைபெறாப்பருவத்திலும், அதேபோல உயர் உற்பத்தி நிலவும் காலத்திலும், குறைந்த உற்பத்தி இடம்பெறும் காலத்திலும் அதிகளவு தளம்பல்களின்றி பேணிவரமுடியும். இது நுகர்வோரை சின்ன வெங்காய தட்டுப்பாட்டிலிருந்தும் உயர் விலைகளிலிருந்தும் பெருமளவுக்குப் பாதுகாக்கிறது.

சின்ன வெங்காயம் முக்கியமான உணவுப் பொருளாக இருப்பதால், இதில் ஏற்படும் விலைமாற்றம் நுகர்வோரின் வாழ்க்கைச் செலவினை நேரடியாகப் பாதிக்கிறது.

வெங்காய உற்பத்தி பெருக்க முயற்சியில் சராசரி விளைச்சலை அதிகரிப்பது மிகமுக்கியமாகும். ஏனெனில், எமது சராசரி விளைச்சல் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்திலும் குறைவாகவே இருக்கிறது. இந்தத் துறையின் சராசரி விளைச்சலைப் பெருக்குவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நல்ல தரமான உயர் விளைச்சல் தரும் விதையினங்களை அபிவிருத்தி செயது வழங்குவதில் கூடியகவனம் செலுத்தப்படுதல்வேண்டும்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 80/= | 25/= | 15/= | 20/= | 15/= | 10/= | 15/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 15/= | 8/= | 20/= | 15/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 35/= | 60/= | 40/= | 35/= | 50/= | 30/= | 60/= | 40/= |
| கத்தரிக்காய் | 10/= | 40/= | 20/= | 10/= | 20/= | 10/= | 15/= | 10/= |
| பாகற்காய் | 25/= | 60/= | 50/= | 15/= | 30/= | 20/= | 25/= | 30/= |
| கரட் | 35/= | 30/= | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 30/= |
| பீற்றூட் | 10/= | 20/= | 20/= | 10/= | 20/= | 10/= | 20/= | 10/= |
| முருங்கைக்காய் | 80/= | 100/= | 120/= | 70/= | 80/= | 60/= | 50/= | 120/= |
| வெங்காயம் | 23/= | 30/= | 35/= | 20/= | 20= | 20/= | 20/= | 35/= |
| பச்சை மிளகாய் | 35/= | 40/= | 40/= | 30/= | 40/= | 35/= | 30/= | 30/= |

## தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி |
|---|---|---|
| மனிதவள பிரிவு, தொலைத்தொடர்பு, லோட்டஸ் வீதி கொழும்பு - 01 | 1) சிரேஷ்ட சந்தைப்படுத்துநர். | பி.எஸ்.சி. வியாபார நிர்வாகம் பிரத்தியேக பாடம் கற்றிருத்தல் வேண்டும். அல்லது சந்தைப்படுத்துவதில் ஒரு அங்கத்தவராக இருக்கவேண்டும். (10 நாட்களுக்குள்) |
| | 2) சந்தைப்படுத்தல் அதிகாரி | சந்தைப்படுத்துதலில் தேசிய உயர் கல்விச் சான்றிதழ். அல்லது சந்தைப்படுத்துதலின் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனங்களினால் பெற்ற சான்றிதழ்கள், மேலும் பேச்சு, எழுத்து முதலான தொடர்பாடல் திறமை. |
| ஆர்தர் கிளாக்கின் நவீன தொழில்நுட்பவியல். | 1) திட்டமுகாமையாளர் | கணினி விஞ்ஞானம் தொலைத் தொடர்பு தொழில்நுட்பவியலாளர் , வணிகத்துறையின் நிர்வாகம் தொடர்பான கல்வியல் உயர் கல்விச் சான்றிதழ். (2 வாரம்) |
| ஆடை தயாரிப்பு நிறுவனம். | 1) தொழில் முகாமையாளர் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான முகாமையாளர். | ஆடை உற்பத்தி தொடர்பான பட்டப்படிப்பு அல்லது உயர்கல்விச் சான்றிதழ். (10 நாட்கள்) |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

## வாரம் ஒரு சிறு கைத்தொழில்

### கற்கண்டு

கற்கண்டு சீனி கொண்டு தயாரிக்கப்படுகின்றது. பளிங்கு போன்று ஒளி ஊடுருவும் அளவிற்குப் பளபளவென்று கட்டி கட்டியாக நான்கு பட்டை, ஆறு பட்டையுடன் சிறுதூள் துணுக்குகளோடு பெரிய பெரிய கட்டிகளாக இருக்கும். இந்த இனிப்புப் பொருள் சுபகாரியங்களுக்கும், பல காரவகைகளுக்கும் மருத்துவ முறைக்கும் நிறையப் பயன்பட்டு வருகின்றது.

300 கிராம் சீனியை, ஒரு பாத்திரத்தில்போட்டு, அரை லீற்ரர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து காய்ச்சினால் கொதித்து நுரைகிளம்பும். அந்த சமயம் மேலே அழுக்கித் திரண்டுவரும். இந்த அழுக்கை கரண்டியினால் வழித்து எடுத்துவிட்டு மேலும் காய்ச்சினால் பாகு பதத்திற்கு வரும்.

இந்த சமயம் ஒரு பாத்திரத்தின் அடிப்பாகத்தில் 300 கிராம் சீனியைக்கொட்டி மட்டமாகப் பரப்பிவிட்டு, அடுப்பிலிருக்கும் பாகு இளகிவரும் சமயம் அதை எடுத்து பரப்பிய சக்கரையின் மேல்விட்டு சுத்தமான கெட்டியான வெள்ளைத்துணியால் பாத்திரத்தின் வாயை மூடி சுற்றிலும் கயிற்றைக்கொண்டு இறுகக் கட்டி, ஒரு பாதுகாப்பான இடத்தில் அசையாமல் வைத்துவிட வேண்டும்.

இது இனிப்பாக இருப்பதால் எறும்புகள் தேடிவரும். அடிக்கடி கவனித்து எறும்பு வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஒன்பது தினங்கள் சென்ற பின் மூடின துணியை அகற்றிவிட்டு உள்ளே பார்த்தால், கற்கண்டு விளைந்திருக்கும். அதை எடுத்து விற்பனை செய்யலாம்.

**குறிப்பு**

ஒரு குறிப்பிட்ட பொருளைத்தயார் செய்து விற்பனைக்கு கொண்டுவர நினைத்தால், தொழில்முறையில் சொல்லிய பொருட்களைக் கிலோக்கணக்கில் வாங்கி உடனே அந்தப் பொருட்களை செய்ய ஆரம்பித்தால், அது சில சமயம் எதிர்பார்த்தபடி சரிவராமல் போகலாம். பொருளின் தன்மை, அளவு, செய்முறை பாகத்தில் தவறு இவைகளினால் குறிப்பிட்டபொருள் நல்ல முறையில் அமையாது. குறிப்பிட்ட பொருளைக் குறைந்த அளவில் தயார் செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

### கட்லெட்

**தேவையான பொருட்கள்:**

கடலைமாவு, 1 கப், உருளைக் கிழங்கு, பீட்ரூட், கரெட், பீன்ஸ் - தலா 100 கிராம், பெரிய வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 5, இஞ்சி 1 துண்டு, பூண்டு 6 சிறுதுண்டுகள், உப்பு - தேவையான அளவு, மைதா - 3 கரண்டி, ரஸ்க்தூள், எண்ணெய் தேவைக்கு ஏற்ப.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேகவைத்து கட்டியில்லாமல் நசிக்கவும். பீட்ரூட், கரட், இஞ்சி பூண்டைத்துருவவும். பீன்ஸ், வெங்காயம், பச்சைமிளகாய். புதினா, மல்லித்தழையினை பொடியாக நறுக்கவும். தாச்சியில் மூன்று கரண்டி எண்ணெயைக் கொதிக்க வைதது நறுக்கிய காய்களைச் சேர்த்து வதக்கவும். பிறகு துருவிய பீட்ரூட், கரட் சேர்த்து வதக்கவும். பிறகு நசித்துவைத்துள்ள உருளைக்கிழங்கினை கொஞ்சம் மிளகாய்த்தூள் கலந்து உப்பு சேர்த்துக் கிளறவும். கடலை மாவை அரைக்கப் தணணீரில் கரைத்து, கிழங்குக் கலவையில் ஊற்றிப் பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்வரை கிளறவும். எண்ணெய் தடவிய நட்ஸ் கொட்டி பரவிவிடவும். ஆறியதும் விரும்பிய வடிவில் துண்டுகளாக்கவும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி கொதித்ததும் பல வடிவங்களுக்கு அமைய வெட்டிவைத்துள்ள துண்டுகளைப் பொரித்து எடுக்கவும்.

மொழிபெயர்ப்பு சிங்களத்தில் சுனந்த தேசப்பிரிய - தமிழில் கூடலூரான்

# 'தம்பி' சரியென்று தமிழினம் சிந்திக்கும் அரசியல் காலகட்டம் இதுவேயாகும்!

மல்லி ஹரி மல்லி என்ற சொற்றொடர் பிரமல்யமான 'எதுமா' என்ற ரூபாவாஹினி அரசியல் நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்ட சொற்பதத்தின் மூலமாகும். இதனை தமிழில் சொல்வதானால் 'தம்பி சரி தம்பி' என்பதாகும். தறபோதைய தமிழ் அரசியல் வட்டத்தில் தம்பி என்ற சொற்பதம்மூலம் அழைக்கப்படும் ஒரேயொரு கதாபாத்திரத்தை மட்டும் அதாவது எல்லோராலும் பார்க்க மிகவும் குறைந்த வயதில் யுத்தத்தில் ஈடுபட்டுப் புகழ் பெற்ற வேலுப்பிள்ளை பிரபாகரனே அப்படி அழைக்கப்படுபவராவார்.

தற்போதைய நிலையில் அவர் சரியென்பது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவ்ரால் எடுக்கப்பட்ட சில அரசியல், இராணுவத் தீர்மானங்கள் எப்படியாகவிருப்பினும், சிங்கள அரசியல் தலைமை பற்றி அவரது மதிப்பீடு பிழையற்றது என்பது மீண்டும் ஒருமுறை தமிழ் மக்கள் முன்னிலையில் இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி தமிழர்களுக்கு வெளிப்படுத்தியதெல்லாம் சிங்களத் தலைமையின் அதிகாரப் போட்டியை மாத்திரமே.

சமாதானப் பேச்சுவார்த்தையினை வெற்றிகரமாகக் கொண்டு செல்லவேண்டுமாயின் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தல் வேண்டும் என்றெல்லாம் - மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் உட்பட இராணுவ வீரர்கள், சிங்கள பலவேகய ஆகியன கடந்த காலம் முழுவதும் பலதரப்பட்ட ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

விடுதலைப் புலிகள் அமைப்பு தனது இராணுவ பலத்தினை அதிகரிப்பது பிழையென அவைகள் சுட்டிக்காட்டின. அதேநேரத்தில், இலங்கை அரசாங்கத்தின் இராணுவம் தனது பலத்தினை அதிகரித்துக்கொள்ள வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டங்கள் செய்தன. சிங்கள சமூகத்துக்குள் விடுதலைப் புலிகள் மீது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையினைப் பயன்படுத்திக் கொள்வதே இந்த ஆர்ப்பாட்டங்களின் நோக்கமாயிருந்தது.

இப்பொழுது நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக் கட்சி - கூட்டுத் தேர்தல் பரசாரம் ஆரம்பித்திருப்பதும் யுத்தமென்ற நிலைப்பாட்டினை உணர்த்தும் சிங்களப் பாட்டன், பூட்டனின் இரத்த உரித்தினைத் தேடப்போவதாகக் கூறிக கொண்டேயாகும். அதேபோன்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறும் காரணம் விடுதலைப் புலிகளைத் தடுத்துநிறுத்துவது பற்றிய அவசியத்தை ஜனாதிபதி உணர்ந்து கொண்டதாலென்பதாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி அரசாங்கத்தில் அவ்வாறான அரசு உருவாகும் பட்சத்தில், குணவன்ச தேரருக்கும் இடம் கிடைக்கும் என்று அங்குமிங்குமாக இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. பொதுத்தேர்தல் மேடை சமாதான விரோத, யுத்தவெறி, இனவெறிப் பேச்சாளர்களால் அலங்கரிக்கப்படுவதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது போகலாம். அப்படிப்பட்ட தேர்தல் மேடைகளில் மக்களின் செல்வாக்கை அதிகம் பெற்ற பேச்சாளராக விளங்குவது யாரென்பதைத் தீர்மானிக்கும் காரணியாக இருக்கப்போவது யார் அதிகம் இனவாதத்தைக் கக்கப்போகிறார் என்பதேயாகும். இந்த நிலைபற்றிய தமிழ் மக்களின் அரசியல் தீர்மானங்கள் இலங்கைச் சமூகம் மேலும் பிளவுபட்டுப் பிரிந்து செல்வதை நோக்கியே செல்லப் போகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் சமாதான அடிப்படையில் இருந்துகொண்டு பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்கமுடியும் என நினைக்கமுடியாது. மேலும் அப்படிப்பட்ட அரசாங்கத்தினால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இப்பொழுது உள்ளதுபோன்று தொடர்ந்து செயல்படுத்தப்படுமா என்பதனையும் அனைத்துலகத் தலையீட்டுக்கு உரிய கவனம் செலுத்தப்படுமா எனபதனையும் எண்ணமுடியாது. அப்படியில்லாமல் பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றிற்கான ஆரம்பம் ஒன்று இருக்க முடியாமல் போகக்கூடும்.

சிங்கள யுத்தமயச் சக்தியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் கோரிக்கைக்கு இணங்க, விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துப் போரிடும் சக்தியினைப் பலவீனப்படுத்தியிருந்தால் அப்படிப்பட்ட அரசாங்கத்தின் கீழ் விடுதலைப் புலிகளுக்கு என்ன நடைபெறக்கூடும்? கட்டாயமாக மீண்டுமொரு சமாதானத்திற்கான யுத்தம் என்பது போன்ற மிகப்பாரியதொரு யுத்தத்திற்கு முகம் கொடுக்கவேண்டியதாயிருக்கும்.

அப்படியானதொரு நிலைமைக்குத் தள்ளப்படுவதற்கு எந்தவொரு கெரில்லா அமைப்பும் தயாராகவிருக்காது என்பது வரலாறாகி விட்டது. சரியோ தவறோ 'சரி தம்பி சரி' என்று தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளுவதை இப்படிப்பட்ட நிலையில் தடுப்பதற்கு ஒருவராலும் இயலாத காரியம்.

உண்மையில் இலங்கையின் தற்போதைய நிலவரங்களால் ஆகக் கூடிய நன்மையினைப் பெறப்போகும் அரசியல் என்பது சுயாட்சிக்கான தமிழ்க்கூட்டுப் போராட்டமேயாகும். வேலுப்பிள்ளை பிரபாகரன் இருபது வருடகாலமாகக் கட்டி வளர்த்த தமிழர்களுடைய போராட்டப் பலத்தினை வெறுமனே கைவிடுவார் என நாங்கள் எவரும் சிந்திக்கவியலாது.

2004 ஆம் ஆண்டுபெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவின் மூலம் தமிழ் மக்களின் முன்னால் வைக்கப்பட்டுள்ள அரசியல் யதார்த்தம் அப்படிச் செய்ய முடியாதென்பதனை உணர்த்துவதாக இல்லையா, சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்த நாட்டின் அரசியல் மாற்றங்களைப் பற்றி விளங்கிக் கொள்வது, தனித்தனியான தங்கள் தங்கள் சொந்த அனுபவத்திற் கிணங்கவே என்பதனை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

> **இலங்கையின் தற்போதைய அரசியல் சம்பவங்கள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு வீடயம் யாதெனில் -தமிழ் மக்களுடைய உரிமை களைப்பெற்றுக் கொள்வதற்கு சிங்கள அரசியற் தலைவர்களையோ, தலைவீகளையோ நம்பியிருத் தல் பிரயோசனம் அற்றது என்ற நிலைப்பாடேயாகும்.**

மறுபக்கத்தில் சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவைக்கு ஏற்ப ஜனாதிபதியுடன் இணக்கப்பாடொன்றைச் செய்து கொள்ளவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு மாதங்களுக்குள் காட்டிய விருப்பமின்மையின் மூலம், விளங்கிக் கொள்ளுவது யாதெனின் - அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றிக்கொள்வதற்கான அபிலாசையினையே அன்றி, சமாதான நடவடிக்கையினை முன்னெடுத்துச்சென்று மக்களுக்கு சமாதான நடைமுறைமூலம் தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுப்பதில் உள்ள அக்கறை அல்ல என்பதாகும்.

பிரதம அமைச்சருடைய நிலைப்பாட்டின் மூலமும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பது அவநம்பிக்கையே அன்றி நம்பிக்கை அல்ல. அதே போன்று ஈற்றில் காலங்கடந்தாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் உடன்பாட்டுக்கு வருவதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்த பொழுது ஜனாதிபதி தெரிவு செய்தது ஜே.வி.பியுடன் இணைந்து அரசாங்கத்தைக் கலைப்பதையேயாகும்.

சிங்கள அரசியலில் முக்கியமான இரு கட்சிகளும் எப்படியாவது அதிகாரத்தினைக் கைப்பற்றுவதை முக்கியமாகக் கொள்வதும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதனைப் பின்னுக்குத் தள்ளுவதும் 1948 ஆம்ஆண்டு தொடக்கம் இன்றுவரை பின்பற்றும் ஒரேயொரு நடவடிக்கை என்பது இதன் மூலம் மீண்டும் ஒருமுறை தமிழ்மக்களுக்கு நிரூபணமாகியுள்ளது.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஒப்பந்தங்கள் பல சிங்களத் தலைவர்களினால் கிழித்தெறியப்பட்டன. இப்பொழுது யுத்த நிறுத்த ஒப்பந்தமும் அதே தலைவிதியினை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் சம்பவங்கள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு விடயம் யாதெனில் -தமிழ் மக்களுடைய உரிமைகளைப்பெற்றுக் கொள்வதற்கு சிங்கள அரசியல் தலைவர்களையோ, தலைவிகளையோ நம்பியிருத்தல் பிரயோசனம் அற்றது என்ற நிலைப்பாடேயாகும்.

செல்வநாயகத்திலிருந்து அமிர்தலிங்கம் வரையான தமிழ் அரசியல் தலைவர்களுக்கு 80 தசாப்தத்தில் முளைத்த இளம்போராளிகள் தொடுத்த குற்றச்சாட்டும் அதுவேயாகும். அதாவது, சிங்கள அரசியல் தலைவர்களுக்குப் பின்னால் சென்று ஒப்பந்தங்களைச் செய்து காலத்தினை வீணாக்கிவிட்டார்கள் என்பதேயாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமல்ல ஆயுதப்போராட்டத்தால் ஒழிய கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாதென இந்த இளம் போராளிகள் எடுத்துக்காட்டினர்.

பதவியிலிருக்கும் சிங்கள அரசியல்கட்சிகளுடன் இணைந்து அரச அதிகாரத்தில் பங்காளிகளாக வருவதற்கு ஜே.வி.பிமுன்னெடுக்கும் உபாயமும் நாடாளுமன்றத்தில் தமிழ் அரசியல் கட்சிகளால் பரிட்சித்துப்பார்க்கப்பட்ட போதிலும் சிங்களப் பெரும்பான்மை நாடாளுமன்றத்தின் முன்னால் அது பலனற்றுப்போய் விட்டது. ஜே.வி.பி போன்று பெரும்பான்மையினரின் மதம் என்றரீதியில் சென்று அரசியல் லாபம்பெறும் முயற்சியில் சிங்கள இனவாதக் குழுவினர் தங்கள்கைக்குள் போட்டுக்கொள்வதற்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் இருக்கவில்லை ஏனெனில், அவர்களுடைய சமயம் வேறென்றபடியாலேயாகும்.

அரசியல் மார்க்கமாக அவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு ஈற்றில் அவர்களுக்கு எஞ்சியிருந்ததெல்லாம், ஆயுத எதிர்ப்புப் பாதையில் அடிவைப்பது மட்டுமே. அதன் மூலம் தமிழ்ச் சமூகத்திற்கு மிகவும் பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும், இப்படியான நிலமையின் கீழ் அப்படிப்பட்ட ஆயுதப்போராட்டத்தினை நியாயப்படுத்துவதற்குத் தமிழ் மக்கள் பின்நிற்பார்களா?

இயல்பாகவே தமிழரானபடியால் இந்த நாட்டில் தமிழ்மக்களுக்கு சுதந்திரத்தின் பின்னர் பல்வேறு துறைகளிலும் அநீதியினையும், தீங்கான திட்டங்களின் பலன்களையும் அனுபவிக்கவேண்டியிருந்தது என்பதனை ஏற்றுக்கொள்ளாத அரசியல் தலைவர்கள்- இன்று இந்த நாட்டில் இல்லையெனலாம். இந்த நிலைமையினைச் சரிசெய்வது எப்படி என்பதையிட்டு, பலதரப்பட்ட கருத்துக்கள் அவர்களிடையே இருப்பது வேறுவிடயம். ஆனாலும், அதேபோன்று உண்மையான ஒன்று என்னவெனில் 1958, 1966, 1987, 2000 ஆகிய ஆண்டுகளில் இப்பொழுது 2001, 2003 ஆகிய வருடங்களிலும் பேச்சுவார்த்தைமூலம் தீர்வொன்றினைக் காண்பதற்கான முயற்சிகளை இறுதிவரை கொண்டுசெல்லக்கூடிய அளவு அரசியல் உறுதிப்பாடு - சிங்கள அரசியல் தலைமைகளால் காட்டப்படவில்லை என்ற நிலைமையே உண்மையாகும். தமிழர்களது ஆயுதப் போராட்டத்தினை மக்கள் மயப்படுத்துவதற்கு அடித்தளம் அமைதது்க்கொடுத்தது இங்கு கூறப்பட்ட அரசியல் யதார்த்தத்தின் மூலமேயாகும்.

அரசியல் பேச்சுவார்த்தைகள்மூலம் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைத் தேடிச்செல்லும் பயணத்தில் முக்கியமான தடையாகவிருப்பது - தமிழ் மக்களிடம் சிங்களத் தலைமைகள் பற்றியுள்ள நம்பிக்கையின்மையைப் போக்குவதாகும். தமிழ் மக்களைச் சிங்களத் தலைமையை நோக்கி ஈர்த்து, விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் இராணுவ, அரசியல் தந்திரோபாயமான 1995-2000 ஆம் ஆண்டுகள் வரையான சமாதானத்துக்கான யுத்தம்மூலம், தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட துயரங்களினால் இந்த அவநம்பிக்கை மேலும் இறுக்கமாகியது.

இப்பொழுது சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக சிங்களத் தலைவர்களாலும், தலைவிகளாலும் பொதுத் தேர்தல் ஒன்றைத் தேர்ந்தெடுத்த 2004 பெப்ரவரி மூலம் தமிழ் மக்களுக்கு கற்பிக்கப்பட்டுள்ளதாவது -

வேறு உருவத்தில் 1983 இல் அவர்கள் கற்ற பாடத்தினையே. அதாவது, ஆயுத பலத்தின் மூலமேயன்றி, வேறெதன்மூலமும் தங்களுடைய உரிமைகள் எவற்றையும் வென்றெடுக்க முடியாதென்பதையே இலங்கையின் எதிர்காலத்திற்கு அது அவ்வளவு நல்ல அறிகுறியல்ல.

தற்போதைய இலங்கை எதிர்நோக்கியிருக்கும் மிக முக்கியமான சவாலாகவிருப்பது- யுத்தத்தினை நிறுத்தி சமாதான சமூக அரசியல் சூழலை ஏற்படுத்துவதன் மூலம், விரைவானதும் சமநிலையானதுமான அபிவிருத்திப் பாதையில் செல்லுவதுமேயாகும். எந்தத் தேர்தல் பிரசாரத்திலும் முக்கிய இலக்காக இருக்கவேண்டியது அதுவேயாகும். ஆனாலும் இந்தத் தேர்தலில் அதன் ஆரம்பத்திலிருந்தே, அதற்கு நேர் எதிர் திசையிலேயே அது சென்றுகொண்டிருக்கிறது. அதனூடாக தமிழ் மக்களுக்கு சிங்கள அரசியல் தலைமை பற்றி இருக்கும் அவநம்பிக்கையை மேலும் பலப்படுத்தவே வழிசமைக்கும். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட இயக்கத்தின் அடிப்படையைப் பலப்படுத்தவும் செய்யும்.

அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பத்தினைத் தூரவிலகிச் செல்லச் செய்துவிடும். அரசியல் பிளவுகள் மட்டுமல்ல, இனங்களுக்கும் மதங்களுக்குமிடையேயான பிளவுகளும் மேலும் தீவிரமான திசைக்குத் திரும்பக்கூடும்.

ஆகவே, நாங்கள் பயணஞ்செய்வது இந்த நாட்டின் சரித்திரத்தில் அர்த்தமில்லாத இலக்கில்லாத பொதுத்தேர்தலை நோக்கியே.

இலங்கை கடந்த காலத்தை நோக்கி பின்னே செல்லும். அதிலிருந்து கரையேறக் கூடிய அரசியல் அறிவு கலாநிதி ஜெயதேவ உயங்கொட சுட்டிக்காட்டியதுபோல், இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு இல்லை. தம்பி சரி என்று மாற்றுவழி ஏதுமின்றி தமிழ் மக்கள் சிந்திக்கின்ற அரசியல் காட்சியே இதுவாகும்.

நன்றி - லங்காதீப

## தென்னிலங்கை அரசியலிலிருந்து....



**அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உள்ளன.**

**அதிகாரப் பரவலாக்களை சுதந்திரக்கட்சி ஆதரிக்கின்றது, ஜே.வி.பி. இயக்கமோ எதிர்க்கின்றது. இதற்கு முன்னர் எல்.ரி.ரியினருடனான ஜனாதிபதியின் இரண்டு சமாதானப் பேச்சுக்களும் தோல்வியடைந்தமைக்கு இதுவே காரணம்.**

**கருணாசேன கொடித்துவக்கு**



**முஸ்லிம் மக்களின் மனதைப் புண்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூடிக் குலாவும் முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம்களின் எதிரியாகும். எதிர்வரும் நாடாளுமன்றத் தோதலில் முஸ்லிம் காங்கிரஸையும் ஐக்கிய தேசிய முன்னணியையும் மககள் ஒதுக்கித் தள்ளுவது நிச்சயம்.**

**நூன்**



**இந்தப் பொதுத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி எவருமே அரசு அமைக்க முடியாது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசினை அமைப்பதற்கு எமது அனுசரனை வேண்டும் என்கின்ற நிலைமைக்கு எல்லாப் பிரதான கட்சிகளையும் உள்ளாக்கியிருக்கின்றது.**

**ரவூப் ஹக்கீம்.**



**ஐக்கிய தேசிய முன்னணி அரசும், ரவூப் ஹக்கீமும் முஸ்லிம் மக்களை ஏமாற்றிவிட்டார்கள். முஸ்லிம் மக்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கவும், உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவுமே நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துள்ளோம்.**

**ஏ.எல்.எம்.அதாவுல்லா**



**சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் போட்டியாக அமையப் போகும் இந்தத் தேர்தலில் - இடம் பெயர்ந்த மக்கள் நிதானத்துடன் செயற்பட வேண்டும்.**

**ரிசாத் பதியுதீன்.**



**ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடுநிசியில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொதுத் தேர்தலுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.**

**மக்கள் எமக்களித்த 6 வருட ஆணையை ஜனாதிப்தி பறித்ததன் காரணமாக. திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகளைத் தொடர முடியாதுள்ளது.**

**கபீர் ஹாசீம்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்*
*ஏது இன்மை கோடி உறும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்....

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா நேரடியாகத் தலையிடப்போவதில்லையென்று இந்திய அதிகாரிகளும், ஆளும் வர்க்கமும் ஒப்புக்கு வெளிப்படையாகக் கூறினாலும், உண்மையில் அதன் தலையீடு என்பது பல்வேறு வழிகளில் இருப்பதை அண்மைக்கால சம்பவங்கள் பலவும் உணர்த்தி நிற்பதுடன் வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் பலவும் இந்தியத் தலையீடு குறித்து வெளிப்படையாக எழுதவும், விமர்சிக்கவும் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பல்வேறு வழிகளில் என்று மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விடயத்தினை இப்போது விலாவாரியாக விபரித்து வெளிப்படுத்துதல் என்பது பல்வேறு காரணங்களுக்காக சாத்தியமில்லாது விட்டாலும், இதுகுறித்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் அண்மைக் காலங்களில் தமது எழுத்துக்களில் அதனை கோடிகாட்டத் தவறியதில்லை.

இலங்கை மீதான இந்திய அபிலாஷைகள் அப்பட்டமான சுயநலத்தன்மை கொண்டவை மட்டுமே என்பதை கடந்தகால இந்திய அணுகுமுறைகள் பலவும் அனுபவபூர்வமாக தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளன.

இந்துசமுத்திரப் பிராந்தியம் மீதான மேலாதிக்கத்தை தம் வசமாக்கும் சர்வதேச ரீதியில் இராணுவம் மற்றும் அரசியல் ரீதியிலான முக்கியத்துவமிக்கதான வல்லாதிக்க சக்திகளின் போட்டியில் பிராந்திய வல்லரசாக தன்னை இனங்காட்டிவரும் இந்தியாவானது, தனது புவிசார் அரசியல் உரிமையுடன் கூடிய ஆளுமையை ஸ்திரப்படுத்திக்கொள்ள தனக்கு வாய்ப்பான சகல வழிகளையும் கையாண்டுவருவது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

தன்னைச் சூழவுள்ள அனைத்து நாடுகளுடனும் இந்தியாவானது ஆத்மார்த்தமான நட்புறவைப் பேணுவதாக இல்லை. தனது தேசிய எல்லைப்புற மற்றும் அயலக நாடுகள் மீது ஏதோவொரு வகையில் மேலாதிக்கம் செய்ய முனையும் இந்திய அதிகாரவர்க்கத்தின் செயற்பாடுகள் தம்மைச் சூழவுள்ள நாடுகளின் அதிருப்தியை மட்டுமே பெருமளவில் சம்பாதித்துள்ளமையும் வெளிப்படையாகும்.

இதற்கு எல்லைப்புற நாடுகள் மற்றும் அயலக நாடுகள் மீதான இந்தியக் கொள்கைவகுப்பாளர்கள் மற்றும் புலனாய்வு அமைப்புக்களின் அதிகாரிகளின் தொலைநோக்குச் சிந்தனையும் தெளிவற்ற தவறானதும் இருதரப்பு நலன்களையும் பாதிக்கக்கூடியதுமான மதிப்பீடுகளும் காரணமென்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள தவறிவிடுகின்றார்கள்.

ஏனைய அயல்நாடுகளில் அவர்களின் அணுகுமுறைகள் குறித்து நாம் கவனத்தில் எடுக்காவிட்டாலும் இலங்கையில் அதுவும் வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பான விடயங்களில் இந்தியா தொடர்ந்தும் தவறான மதிப்பீடுகளையும் அதைத் தொடர்ந்த அணுகுமுறைகளையுமே மேற்கொண்டு வருவதனை உணரமுடிகிறது.

இது உடனடியாக இந்திய நலனுக்கு சில அனுகூலங்களைக் காட்டினாலும், நீண்டகால நோக்கில் அது நேர்மாறான - இந்திய எதிர்பார்ப்புக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதை வரலாறு உணர்த்தவே செய்யும்.

இலங்கை தமிழர்களுடன் பாரம்பரிய - கலாசார - பண்பாட்டு ரீதியிலான தொப்புள்கொடி உறவுள்ளதைக் காரணங்காட்டி தனது குறுகிய அரசியல் மற்றும் இராணுவ அதிகாரங்களை அதன்மூலமாக அடைய நினைத்த இந்தியா, இலங்கையுடன் 1980 களின் இறுதியில் மேற்கொண்ட அவசர ஒப்பந்தமும் அதன் விளைவுகளும் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

அந்த ஒப்பந்தம் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் கிடைத்த வரலாற்றுத் தோல்விகளில் ஒன்றாகும்.


அதன்பின் சிலகாலம் மௌன அவதானிப்புக்களுடன் இருந்த இந்தியா - அதாவது - ஆனையிறவு புலிகளினால் வெற்றிகொள்ளப்பட்ட பின்னர், ஏற்பட்ட சூழ்நிலை இலங்கை அரசை இந்தியாவிடம் பாதுகாப்பைத் தேடவைத்ததை அடுத்து மீண்டும் இலங்கை விவகாரங்களுக்குள் தலையீடு செய்யத் தொடங்கியுள்ளது எனலாம்.

இது ஊடகங்களிலும் வெளிப்படையாக எழுதப்படும் விடயமாகிவிட்டது. கடந்த சில நாட்களாக கிழக்கில் நடைபெறும் நிகழ்வுகளைப் பெரிதுபடுத்தி ஊடகங்களைப் பயன்படுத்தி பிரசாரங்களை மேற்கொள்வதில் இந்திய ஊடகங்கள் காட்டிவரும் வேக ஆர்வம், இந்தியாவின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

இப்போதும் தமிழ்மக்களின் எதிர்காலத்தோடு விளையாடும் திட்டத்துடன் தமிழின விரோத சக்திகளை தம்வசமாக்கிக் கொண்டு சமாதான விரோத சக்திகளை உற்சாகப்படுத்திக் கொண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதை தமிழ் மக்கள் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர் என்றே கூற வேண்டும்.

இந்தியா மீண்டும் தனது வரட்டுக் கௌரவத்திற்காகவும் சுய அபிலாஷைகளுக்காகவும் தமிழர்களை பிளவுபடுத்தி, தமிழ்த் தேசிய கட்டமைப்பைச் சிதைத்து தமிழீழத் தேசியத் தலைமையைப் பலவீனப்படுத்த முயற்சிப்பது மற்றுமோர் வரலாற்றுத் துரோகத்தைச் செய்யும் அதன் முனைப்பையே உணர்த்துவதாக உள்ளது.

## நாடும் நடப்பும்




### சோமதேரரின் மரணம் தொடர்பாக

# விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கவும்

### ரத்னபால தேரர் கோரிக்கை

(கொழும்பு)

கங்கொடவில சோமதேரரின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என அத்தங்கனே ரத்னபால தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சோமதேரரின் மரணம் நிகழ்ந்து நாளையுடன் 3 மாதங்கள் நிறைவு பெறுவதால், அன்றையதினம் மாபெரும் பிக்குகள் கூட்டம் ஒன்றையும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சோமதேரரின் மரணம் தெடர்பாக பல்வேறு விதமான முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவற்றுக்கு முடிவுகாணுமுகமாக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நாளை நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்படவேண்டும்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது அனுமதிக்கமுடியாதது எனவும் - இவ்வாறு ஒருசிலர் தேர்தலில் போட்டியிடுகின்றமையால், பௌத்த சங்கபீடம் பிளவுபடும் ஆபத்து இருக்கின்றது. இது பௌத்த சங்கபீடத்துக்கு அவமானமாகும்.

அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக பிக்குகள் செயற்படுவதில் தவறில்லை. தேர்தல் பிரசார மேடைகளில் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து உரை நிகழ்த்தலாம். ஆனால், நேரடியாக அரசியலில் ஈடுபட்டுத் தேர்தலில் போட்டியிடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தச்சன் தோப்பு, மறவன்புலோ பகுதியிலுள்ள 11 வீடுகள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்

### படைத்தரப்பு தெரிவிப்பு

தென்மராட்சி தெற்கிலுள்ள படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தச்சன்தோப்பு, மறவன்புலோ பிரதேசங்களிலுள்ள 11 வீடுகளை வழங்க படைத்தரப்பு இணங்கியுள்ளது.

அடுத்த வாரங்களில் தோப்பு விநாயகர் ஆலயப் பகுதிகளிலேயே இந்த 11 வீடுகளும் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர்.

படிப்படியாக மக்களைக் குடியமர்த்த படைத்தரப்பு நடவடிக்கை எடுக்குமென தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்தார்.

இவ்வாறு விடுவிக்கப்படவுள்ள 11 வீடுகளையும் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இந்தப் பகுதி மக்கள் பாரிய அளவிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, படையினர் 131 வீடுகளில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்தபோதிலும், 11 வீடுகளே தற்போது விடுவிக்கப்படவுள்ளன. (34)

## ஆட்சிக்கு வந்து 3 மாதங்களில் சம்பள உயர்வு வழங்கப்படும்!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அதிகாரத்துக்கு வந்து மூன்று மாதகாலத்துக்குள், அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று ஜனாபதிபதி சந்திரிகா பணடாரநாயக்க தெரிவித்தார். முன்னணியின் பிரசாரக் கூட்டம் ராகமையில் இடம்பெற்ற போதே,அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - திஸ்ஸ தேவேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சுகள் கவனத்தில் எடுக்கப்படும். அத்தோடு விவசாயிகளுக்கு அதிக நன்மை பயக்கக்கூடிய நிவாரணங்கள் அறிவிக்கப்படும். தேவையானவர்களைக் கண்டுபிடித்து சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்படும் என்று சந்திரிகா பண்டாரநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

## கிராம அலுவலர் பிரிவுரீதியாக கலாசார குழுக்கள் அமைக்கப்படுகிறது

சமுர்த்தி கலாசார இளைஞர் வேலைத்திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகளை மேம்பாடடையச் செய்யும் நோக்கம் கிராம அலுவலர் பிரிவுரீதியாக கலாசாரக் குழுக்களை அமைத்து - அதன் விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் சுற்றுநிருபம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவுள்ள 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து, கலாசார குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அந்தந்த பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சமுர்த்தி அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சமுர்த்தி அதிகார சபையால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கலாசார மற்றும் இளைஞர் அலுவல்கள் பிரிவின் செயற்பாட்டிற்குட்பட்ட இந்தக் கலாசார குழுவின் மூலம், அந்தந்தப் பகுதி இளைஞர், யுவதிகள்- வேலைவாய்ப்பையும் தொழிற் பயிற்சியையும் பெற்று வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (44)

# எரிபொருள் விலை அதிகரிப்பு தடுக்க அரசு நடவடிக்கை

கடந்தசில மாதங்களாக உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை அதிகரித்து வருகின்றபோதும், அது இலங்கையைப் பாதிக்காத வகையில் அரசு நடவடிககை களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய அரசு மாதமொன்றிற்கு 131 கோடி ரூபாவை நிவாரணமாக வழங்குகின்றது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையேற்றத்துக்கு அமைய, ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 64 ரூபா 24 சதமாக இருக்கவேண்டும். ஆயினும், ஒரு லீற்றர் 57 ரூபாவிற்கே விற்கப்படுகின்றது. இது போன்று டீசலும் 41 ரூபா 14 சதமாக விற்கப்படவேண்டும். ஆனால், 32 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 32 ரூபா 23 சதத்திற்கு விற்கப்படவேண்டும். ஆனால், 25 ரூபா 50 சதத்திற்கே விற்கப்படுகின்றது.

அத்துடன், அனைத்து காஸ் சிலிண்டர்களுககும் 60 ரூபா நிவாரணத்தை அரசு வழங்குகின்றது.

அரசின் சிறந்த முகாமைததுவத்தின் காரணமாகவே திறைசேரியினால் இவ்வாறான நிவாரணங்களை வழங்க முடிந்ததாக அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள் பாகம் XXVI - சிவா சின்னப்பொடி

# விபத்துக்களின் அதிகரிப்பால் இரத்தான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்




முதலாவது பார ஊர்தி - நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து, முதலாவது தடத்துக்கு உடனடியாகச்செல்ல, அதை மூன்றாவது தடத்தில் முந்த முற்பட்ட இரண்டாவது பாரஊர்தி - சடுதியாக இரண்டாவது தடத்தை நோக்கி மறுபடியும் நகர, தமிழ்க் குடும்பத்தினர் சென்ற காரைச் செலுத்திய குடும்பத் தலைவன் தனது வேகத்தை குறைக்க முற்பட்டுக்கொண்டு, பிரேக்கை அழுத்த- கார் சமநிலை இழந்து, இழுத்துச் சென்று அங்கிருந்த தடுப்புச் சுவருடன் மோதி கவிழ்ந்து, இரண்டு தடவை குத்துக்கரணம் அடித்து தீப்பற்றிக் கொண்டது.

கார் புரண்ட அதிர்ச்சியில் எல்லோரும் மயக்கமாகிவிட்டனர். பார ஊர்தி சாரதி ஒருவர் காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்து கார் சாரதி (கணவன்) யையும் - அவருடன் பயணித்த உறவினரையும் வெளியில் இழுத்துக் காப்பாற்றிவிட்டார்கள்.

ஆனால், அந்தக் குடும்பத்தலைவியையும் பிள்ளையையும் காப்பாற்ற முடியவில்லை. அதற்குள் கார் முழுவதுமாக தீப்பற்றிவிட்டது.

'ஐயோ காப்பாத்துங்கோ, காப்பாத்துங்கோ' என்று அந்தப் பெண் கதறிய கதறல் - பெரிதாகக்கேட்டதாக அந்த வழியால் எதிர்முனையில் காரில் சென்ற தமிழர்கள் தெரிவித்தனர்.

தீயணைப்புப் படையினர் வந்து தீயை அணைத்தபோது, தனது குழந்தையை அணைத்தபடி உயிரிழந்திருந்து கருகிப் போயிருந்த தாயையும், தாயின் அரவணைப்புக்குள் உயிர்விட்ட குழந்தையையும் தான் மீட்கமுடிந்தது. இந்தச் சம்பவம் பாரிஸ் தமிழர்களை அப்போது சோகத்தில் ஆழ்த்திய ஒரு சம்பவமாக இருந்தது.

இதேபோல ஜேர்மனியிலிருந்து லூர்து மாதாவைத் தரிசிக்கச் சென்ற ஒரு குடும்பமும் - 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விபத்தில் சிக்கி, உடல் நசிந்து பலியாகியிருந்தது.

ஜேர்மனியின் பிராங்போட் நகரத்தை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட அந்தத் தமிழ்க் குடும்பம்- (கணவன் - மனைவி மற்றும் மூன்று குழந்தைகள்) பாரிஸிலிருந்து உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து ஒரு சிற்றூர்தியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு லூர்துமாதாவைத் தரிசிக்கச் சென்றது.

1997 ஆம் ஆண்டு - பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அவர்கள் பாரிஸின் புறநகர்ப் பகுதியான இவிறி (Ivry) யிலிருந்து புறப்பட்டனர்.

பகலில் சென்றால் வாகன நெரிசல் அதிகமாக இருக்கும் என்று சிற்றூர்திச் சாரதி கூறியதால், இரவு 9 மணிக்கே அவர்கள் 'இவிறி'யிலிருந்து புறப்பட்டனர்.

பிரான்ஸின் இரண்டாவது பெரிய நகரமான லியோன் (Lyon) நகரத்துக்குச் சென்று, அங்கிருந்த இன்னொரு உறவினரையும் அழைத்துச் செல்வது அவர்களது திட்டமாக இருந்தது. பாரிஸிலிருந்து லியோனுக்குச் செல்லும் A 6 அதிவேக நெடுஞ்சாலையில், மணிக்கு 150 முதல் 180 கிலோமீற்றர் வேகத்தில் அவர்களது சிற்றூர்தி பயணித்தது.

ஜேர்மன் குடும்பம், பாரிஸிலுள்ள உறவினர்கள், வாகன சாரதி என்று 9 பேர் அந்தச் சிற்றூர்தியில் பயணித்தனர். லியோன் நகரை அண்மித்தபோது, நல்ல அடைமழை பொழிந்துகொண்டிருந்தது.

மழைபெய்யும்போது, அதிவேக நெடுஞ்சாலையில் செல்பவர்கள்- மணிக்கு 100 முதல் 120 கிலோமீற்றர் வேகத்திலேயே செல்லவேண்டும் என்பது கண்டிப்பான விதி. ஆனால், இந்தச் சிற்றூர்திச் சாரதி தன்மீதுள்ள நம்பிக்கையினாலும், தன்னுடைய வாகனத்திலிருந்த நம்பிக்கையினாலும் 150 முதல் 160 கிலோமீற்றர் வேகத்தில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

மழைபெய்யும்போது அல்லது கடுமையான பனிமூட்டம் இருக்கும்போது, போக்கஸ் லைட் அல்லது ஹெட்லைட் என்று ஆங்கிலத்திலும், 'பூது றூட்' என்று பிரெஞ்சிலும் அழைக்கப்படும் - நெடுந்தூர நேர்வீச்சுக்கொண்ட லைட்டைப் போடக் கூடாது என்பதும், அவ்வாறு போடும்போது அது முன்னால் ஒரு தடுப்புச் சுவர் உள்ளதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, தூரப்பார்வையை மறைத்துவிடும் என்பதும் - ஒரு அடிப்படை எச்சரிக்கையாகும்.

ஆனால், இந்தச் சிற்றூர்திச் சாரதி இந்த ஹெட் லைட்டைப் போட்டவாறே ஓடியிருக்கிறார். அடிக்கடி 'சனியன் ஒன்றும் தெரியவில்லை' என்று புலம்பிக்கொண்டே வேகத்தைக் குறைக்காமல் ஓடியிருக்கிறார்.

லியோன் நகரத்துக்கு 10 கிலோமீற்றர் தூரம் இருக்கும்போது, இவர்களுக்கு முன்னால் 80 கிலோமீற்றர் வேகத்தில் சென்றுகொண்டிருந்த எரிபொருள் கொள்கலன் (பவுசர்) பார ஊர்தி ஒன்று - தான் பயணித்த முதலாவது தடத்தில் சென்ற இன்னொரு பாரஊர்தியை முந்துவதற்காக, இரண்டாவது தடத்துக்கு வந்தபோது, அதைக் காணாதநிலையில் தமிழர்கள் சென்ற இந்தச் சிற்றூர்தி 155 கிலோமீற்றர் வேகத்தில் சென்று, அதன்மீது மோதி - அப்பளம்போல் நொருங்கிப்போனது.

இந்தச் சிற்றூர்தி - பாரஊர்தி மோத, அது முன்னால் சென்ற இன்னொரு பாரஊர்தியை மோத, பின்னால் வந்த வாகனங்கள் ஒன்றின் பின் ஒன்றாக மோத - மொத்தம் 16 வாகனங்கள் அந்தச் சம்பவத்தில் விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் - சிற்றூர்தியில் சென்ற ஜேர்மன் தம்பதி, அவர்களது 12 வயதான மூத்த ஆண் குழந்தை, வாகனச் சாரதி உட்பட, மற்ற வாகனங்களில் இருந்தவர்கள் என்று மொத்தம் 9 பேர் பலியானார்கள், 28 பேர் காயமடைந்தனர்.

1997 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த மிகமோசமான வாகன விபத்துக்களில் இதுவும் ஒன்று என்று பிரான்ஸின் போக்குவரத்து காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை, பிரெஞ்சுச் சாரதி அனுமதிப் பத்திரமாக மாற்றும் நடைமுறையை நிறுத்துமாறும் போக்குவரத்து அமைச்சு உத்தரவிட்டது.

1990 இற்கும் 1998 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பாரிஸ் லூர்து நெடுஞ்சாலைகளில் - சாலைகளில் மட்டும் 300 இற்கும் அதிகமான விபத்துக்கள் இடம்பெற்றிருப்பதாகவும், இதில் 50 முதல் 60 வீதமானவை இலங்கைத் தமிழர்கள் சம்பந்தப்பட்டவை என்று பாரிஸ் நகர போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாரிஸ் லண்டன் A 1 அதிவேக நெடுஞ்சாலையில், அளவுக்கதிகமான வேகத்தில் சென்ற சிற்றூர்தி (கார்) தடம்புரண்டதில், 22 வயதுப் பெண் பிள்ளை உயிரிழந்தது. வாகனத்தை ஓட்டிச்சென்ற தந்தை காலை இழந்தார் - ஜேர்மன் எசனிலிருந்து பேர்லின் நகருக்குச் சென்ற ஒரு தமிழ்க் குடும்பம் - காருடன் நசுங்கி உயிரிழந்தது. சுவிஸ் பாசல் - பேர்ண் அதிவேக நெடுஞ்சாலையில் கார் தடம்புரண்டதில் இரண்டு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தது ... இப்படி நிறையச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பெரும்பாலான விபத்துக்களுக்கு அதிகவேகமும், போககுவரத்து விதிகளை மீறுவதும்தான் காரணமாக இருந்திருக்கிறது.

மனைவியுடன் சண்டைபிடித்துக் கொண்டு, காரை அசுர வேகத்தில் செலுத்தி, இரண்டு பேரைக் காயப்படுத்தி, பேருந்து ஒன்றுடன் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவமும் பாரிஸில் நடந்தது.

இது 1995 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பாரிஸின் 12 ஆவது நிர்வாகப் பிரிவில் நடந்தது. பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் - வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு, வாகனம் ஓடத்தெரிந்தால் மட்டும் போதாது. போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய பரீட்சையில் சித்தியடையவும் வேண்டும்.

நம்மவர்களுக்கு மொழி ஒரு பிரச்சினையாக இருந்ததால், இது ஒரு சிக்கலான விடயமாக இருந்தது. இதனால் கொழும்பிலிருந்து தரகர்கள் மூலம் எடுக்கப்பட்ட இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொடுத்து மாற்றுவதில்தான் பலர் கவனம் செலுத்தினர்.

தொடர்ச்சியாக வீதி விபத்துக்களில் நம்மவர்கள் சிக்கி உயிரிழக்கும், காயமடையும் விதம் அதிகரித்ததையடுத்து, 1990 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்தே படிப்படியாக பிரெஞ்சு அரசாங்கம் இந்த நடைமுறையை நிறுத்தியது.

1990 களின் முற்பகுதியில், புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் தமிழ் சமூகமாக ஒருங்கிணைந்தபோது, அவர்களுக்கான மெய்யியல் தளம் ஒன்று தேவைப்பட்டது.

அந்நியமாதல் மற்றும் மதமாற்றக் குழுக்களின் ஊடுருவல் என்பவற்றைத் தடுப்பதற்கு இது முக்கிய தேவையாக இருந்தது.

மெல்ல மெல்லப் பிள்ளையாரும், முருகனும், சிவனும், அம்மனும் என்று இந்துக் கடவுள்களும் விமானமேற்றி அல்லது கப்பலேற்றி ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

ஆரம்பகாலத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் கோயில்களை எப்படிக் கட்டுவது? கிறிஸ்தவ பாரம்பரியத்தைக் கொண்ட இந்த நாடுகளில் இந்துக் கோயில்களைக் கட்டமுடியுமா? என்ற பல சந்தேகங்கள் நம்மவர்களுக்கு இருந்தன.

கோயில்களைக் கட்டுவதற்கான நடைமுறைபற்றிய [illegible] அறிவு அவர்களுக்கு குறைவாகவே இருந்தன. பாரிஸ் நகரத்தில் முதலில் கடை ஒன்றின் களஞ்சிய அறைப்பகுதியிலேயே பிள்ளையார் கோயில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

அது ஒரு வழிபாட்டிடம். பொது மக்கள் தங்கள் மெய்யியல் உணர்வை வெளிப்படுத்துவதற்கு ஒன்றுகூடக்கூடிய இடம் என்கின்ற நிர்வாகப் பதிவு இல்லாமலே அந்தக் கோயில் இயங்கி வந்தது.

புலம்பெயர்ந்து வந்த ஒரு அந்தணரும், அந்தப் பிள்ளையார் கோயில் அர்ச்சகராக இருந்து வந்தார். கோயிலின்மூல விக்கிரகமான பிள்ளையார் - பலகையிலான ஒரு பீடத்திலேயே வைக்கப்பட்டிருந்தார். இந்து சமய முறைப்படி 'பிரதிஷ்டை' என்கிற சடங்கின் அடிப்படையில் அந்த விக்கிரகம் வைக்கப்படவில்லை. சட்டப் பிரச்சினை வந்துவிடுமோ என்கிற பயம்தான் இதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

ஆனால், மக்கள் இது ஆகம விதிப்படி அமைந்த ஆலயமா? இல்லையா? என்பதையெல்லாம் பார்க்கவில்லை.

அவர்களைப் பொறுத்த வரை தங்களது மதச் சடங்குகளை நிறைவேற்றக் கிடைத்த ஒரு புனிதமான இடம் என்றே பார்த்தார்கள்.

வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தக் கோயிலில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

*(தொடரும்...)*

# உரிமைக்களம்

## போரற்ற அரசியலுக்கு வாக்களிப்போம்

அன்பான தமிழ் மக்களே நீங்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஆளப்படுபவர்கள். உங்கள் முடிவுகள் யதார்த்தமாயும், சரியானதாயும் அமைவது அவசியம்.

கடந்த இருபது ஆண்டுகளில் தற்போது நீங்கள் எதிர்கொள்ளும் தேர்தல் - சிக்கலானதும், தனித்துவம் மிக்கதும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

தமிழர் - மிக நீண்டகாலமாக இழந்துபோன நாடாளுமன்றப் பலத்தையும் அல்லது இழக்கவைத்த பலத்தை மீண்டும் நிலைநாட்ட முன்வரவேண்டும். நடப்பு நிலைகளைப் பார்த்தீர்களாயின், ஏப்ரல் 2 ஆம் திகதி கதவுகளையும், கேற்றுக்களையும் இறுகப் பூட்டிவிட்டு, தேர்தலைப் பகிஸ்கரிக்கலாமென நினைக்கலாம்.

அப்படிச் செய்வீர்களாயின், உங்களை நீங்களே தண்டிப்பதற்குச் சமமானது. இயங்கியல் வெற்றிடங்களை விடுவதுமில்லை, அவை பூர்த்தி செய்யாமல் விடப்படுவதுமில்லை. அதனால் நீங்கள் உங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய முயலுங்கள். உங்களை நீங்களே புதைகுழிக்குள் தள்ளாதீர்கள்.

ஏன் எல்லோரும் வாக்களிக்க வேண்டுமெனக் குரல்கொடுக்கப்படுகின்றது என்பதனைத் தெளிவடையவேண்டும். அதாவது தற்போதிருக்கும் தேர்தல் - விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமை.

இதில் வாக்களிப்பு விகிதம் எவ்வளவு அதிகரிக்கின்றதோ, அவ்வளவுக்கு மேலதிக ஆசனமும், தேசியப் பட்டியல் ஆசனமும் அதிகரிக்கும். அதனால், தமிழரின் நாடாளுமன்றப்பலம் அதிகரிக்கும். அவ்வாறு தமிழர் பலம் அதிகரித்தால், 2/3 பெரும்பான்மையைப் பெறமுடியாத பெரும்பான்மையினத்தின் கட்சியொன்று, தமிழரின் நாடாளுமன்றப் பலத்தில் நம்பிக்கைகொண்டு ஆட்சியை அமைக்கும்.

அதனால், தமிழரின் பிரதேசத்தின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நிலைமை ஏற்படலாம்.

தெற்கில் மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் அதிக வாக்குகளை வழங்குவார்களாயின், ஆட்சியை அவர்கள் பிடிப்பார்கள். ஆனால், தனித்து ஆட்சியைப் பெறமுடியுமா என்ற கேள்வியுண்டு. அப்படியன்றி, ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைப் பிடிக்குமாயினும், பக்க உதவிக்கு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு அவசியம்.

ஏனெனில், விகிதாசாரத் தேர்தல் - அறுதிப் பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதற்கு வாய்ப்பை இதுவரை கொடுக்காதது மட்டுமன்றி, விகிதாசாரப்படி அது சாத்தியப்படுவதும் கடினம். எனவே, தமிழர் வாக்குகள் ஒன்றுசேர்ந்து விகிதாசாரத்தைக் கூட்டுமாயின், அதிக ஆசனத்துடன் மூன்றாவது பலமான சக்தியாகத் தமிழர் தரப்பு மாறும்.

அதனால், தென்னிலங்கை நினைத்ததுடன் போரையோ அல்லது சமாதானத்தையோ தான் விரும்பியபடி தீர்மானிக்க முடியாதநிலை ஏற்படும். அப்படியின்றி, நீங்கள் அதிகளவில் வாக்களிக்காது விட்டால், உதிரிகள் ஒன்று இரண்டு ஆசனத்துடன் மக்கள் சுதந்திர முன்னணியின் கைகளைப் பலப்படுத்துவதுடன், சகாராப் பறவைகள் போன்று தலைநகரத்திலுள்ள கும்மாளக் ஹோட்டல்களுக்கும், அந்நிய நாட்டின் கூரைகளுக்குள்ளும் புகுந்து மறைந்துவிடுவார்கள்.

தென்னிலங்கைச் சக்திகள் திரும்பவும் போரைத் தொடங்குவார்கள். கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு தமிழன் ஓடும் நிலையை மீளவும் உருவாக்குவார்கள்.

எனவே தங்கள் ஒவ்வொருவரது பங்களிப்பு சமாதானத்தை உடனடியாக மலரவைக்குமோ இல்லையோ, போரை வராமல் தடுக்கும். தமிழரின் ஒற்றுமைக்கு வாக்களிக்கத் தவறினால், போர் எங்கள் கதவுகளைத் தட்டும், ஏன் அடித்துநொருக்கவும் பார்க்கும். ஏன் இதைத் திட்டவட்டமாகக் கூறமுடியுமென்றால், இன்றைய தேர்தலைத் தடுக்கச் சர்வதேசம் எடுத்தமுயற்சி சொல்லில் அடங்காதவை.

அப்படியான நிலையிலும் தேர்தலை வைத்தே தீருவேன் என ஒற்றைக்காலில் நின்றது மக்கள் சுதந்திரக் கூட்டணி என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. எனவே, தேர்தல் வெற்றிக்குப் பின்னால் போரும், அது சார்ந்த அரசியலும்தான் சாத்தியப்படும்.

அப்போது உதிரிகள் தமிழோசைக்கு ஒரு பேட்டி கொடுப்பார்கள் அல்லது தாம் வசிக்குமிடத்தில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்துவார்கள். அப்படியே ஒட்டிய மண்ணைத் தட்டிவிட்டு, விமானத்தில் பறந்துவிடுவார்கள். அபிவிருத்திக்கும், மீள்கட்டுமானத்திற்கும் வந்த நிதியைக் கணக்கின்றி அல்லது கணக்குக்காட்டாது செலவு செய்வார்கள். பின்னர் உடன்பிறப்பையும் உறவினரையும் கிடைக்கும் பதவிகளில் அமர்த்துவார்கள்.

பிறருக்குச் செய்வதாயின் - கட்சிக் கடமைக்கெனப் பல இலட்சங்களை வாங்கி, வெள்ளை அங்கிக்குள் போடுவார்கள். அவர்கள் உள்நாட்டில் மட்டுமல்ல, அயல் நாடுகளிலும் பிரபலம் பெறுவார்கள். அவர்கள் ஒருவகைப் பாம்புகள் மட்டுமே. யாரோ ஊத ஆடுவதுபோன்று.

2001 ஆம் ஆண்டுத் தேர்தல் முடித்துப் போனவர்கள், இப்போதுதான் வந்திருகிறார்கள். சிலர் வருவார்கள், போன பிற்பாடு செய்தி பத்திரிகையில் வரும்.

எனவே, வாக்களிக்கத் தவறாதீர்கள். அதேபோன்று யாருக்கு வாக்களிப்பது நன்று என்பதையும், எதற்காக வாக்களிக்கவேண்டும் என்பதையும் மறந்துவிடாதீர்கள். இந்திய ரூபாக்களுக்கு எமது நாட்டில் இருக்கும் பெறுமதி - யுரோலாந்து நாணயத்திற்கே கிடையாது. மீண்டும் உரிமைக் களத்தில் சந்திக்கும்வரை நன்றிகள்.

க. ஐங்கரன்

யாழ்ப்பாணம்

# ஹெயிட்டியின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் இடைக்கால பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்!



ஹெயிட்டியின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஜெரால்ட் லட்டோட்சு அந்த நாட்டின் இடைகாலப் பிரதமராக உயர்மட்டக் குழுவைக் கொண்டு அமைக்கப்பட்ட சபை ஒன்றினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டை நிர்வகிக்கும் பொறுப்புடன் தேர்தல் ஒன்றிற்கான முயற்சிகளையும் அவர் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியான அலெக்சாண்டர், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். மேலும், புதிய பிரதமர் நாட்டின் சட்ட ஒழுங்குகளை நிலை நாட்டுவது கடுமையான ஒரு பணியாக இருக்குமென பி.பி.சி.யின் டானியல் லாக் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டிற்கு ஆதரவான குழுவினர், தமது தலைவர் அரிஷ்டைட்டை முற்றாக நீக்கும் முயற்சிக்கு எதிராக போராடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

இதனிடையே புதிய பிரதமர் 'ஜெரல்ட்' தெரிவித்த கருத்தில், மக்கள் ஒன்றிணைந்து ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளார். புதிய பிரதமர் ஹெயிட்டியின் வட பிரதேசத்தில் போராளிக்குழுக்களின் கட்டுப்பாட்டில் அமைந்த 'கொனெய்வெஷ்' என்ற பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் சதிப்புரட்சி மூலம் 1988 இல் ஆட்சிசெய்த லெஷ்லி மணிக்காட்டின் அரசில் வெளிநாட்டமைச்சராக பணிபுரிந்துள்ளார்.

இதேவேளை, உணவு சுகாதாரம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இணைப்பாளர் 'ஜான் எக்லாண்ட்' தெரிவிக்கும் போது, பாதுகாப்பின்மையும் பொருட்களை




ஹெயிட்டிக்கு கொண்டுவருவதற்கான பாதைகள் சீர்குலைந்திருப்பதும் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு தடையாக அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஹெயிட்டியின் மேற்குப்பிராந்தியத்தில், அதிகளவிலான மக்கள் சத்துணவு குறைவும், போதிய சுகாதார வசதிகள் இன்றியும் குடிநீர்ப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## அணு உற்பத்தியை தொடரப்போவதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

ஈரான் அணுசக்தி பொருட்களின் உற்பத்தியை மீண்டும் தொடரப்போவதாக அறிவித்துள்ளது. யுரேனியத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உரிமை தமக்கு உண்டு என ஈரானின் வெளிநாட்டு



அமைச்சர் 'கமால் கராசி' தெஹ்ரானில் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

இதனிடையே, சென்ற மாதம் யுரேனியத்தை வலுப்படுத்தும் திட்டங்களை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும், அணுசக்தியை ஆக்கபூர்வமான தேவைகளுக்கு உபயோகிக்க உள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

தற்போது அமெரிக்காவின் அழுத்தத்திற்கு ஐரோப்பிய நாடுகள் செயற்பட முயற்சித்தால், ஈரான் சர்வதேச அணுசக்தி அமைப்பிற்கு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு முன்வரப்போவதில்லை என தெரிவித்திருந்தது. இது தொடர்பாக ஈரானுடன் எவ்வாறான அணுகுமுறைகளை மேற்கொள்வது என்பதை தீர்மானிப்பதற்கு, சர்வதேச அணுசக்தி அமைப்பு திங்கட்கிழமை கலந்தாலோசிக்கவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் மொகமட் எல் பிராட்டை தெரிவித்தார்.

மேலும் ஈரானின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்த கருத்தை, நாட்டின் பாதுகாப்பு தேவைகளுக்கான யுரேனியத்தை பிரித்தெடுக்கும் கருவிகளை தயாரித்துள்ளதாக தெரிவித்தார்.

ஆனால், அமெரிக்கா தெரிவித்தது போன்று அணு ஆயுதங்கள் தயாரிக்கும் யுரேனியத்தை தாம் பிரித்தெடுக்கும் உபகரணங்களை தாம் தயாரிக்கவில்லை என தெரிவித்தார்.

## சிம்பாப்வே அரசாங்கத்தினால் 60 கூலிப்படையினர் கைது

அந்நியநாட்டு கூலிப்படை எனக் கருதப்படும் 60 பேர் ஞாயிற்றுக்கிழமை சிம்பாப்வேயில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இவர்களுக்கு சிம்பாப்வே நாட்டின் அதிகூடிய தண்டனையான மரண தண்டனை வழங்கப்படுமென சிம்பாப்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கோலா, தென்னாபிரிக்கா, நமீபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரயாணம் மேற்கொண்ட விமானம் சிம்பாப்வேயில் வந்திறங்கியபோது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக திங்கட்கிழமை கருத்துத் தெரிவித்த சிம்பாப்வேயின் உள்நாட்டு விவகார அமைச்சர் கெம்போ மொகடி கைதுசெய்யப்பட்டவர்கள் கூலிப்படைகளைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் பிராயாணம் மேற்கொண்ட விமானத்தில் இராணுவம் தொடர்பான பொருட்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே பிரித்தானியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் அதிகாரி கருத்துத் தெரிவிக்கும்போது, கொங்கோ ஜனநாயக குடியரசின் சுரங்கம் ஒன்றில் பாதுகாவலர்களாக கடமை புரிவதற்காகவே இவர்கள் பயணம் மேற்கொண்டிருந்ததாக தெரிவித்தார்.


இதேவேளை, கஜனாவின் தகவல் அமைச்சர் ஒகஸ்டின் நெசி நெடிமூ தெரிவித்த கருத்தில், 15 கூலிப்படைகள் ஏற்கனவே கஜனாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் அனேகமானோர் தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்தார்.

## உலக நோக்கு

## சியராலியோனில் ஐ.நா.துணையுடன்

# போர்க்கால கைதிகளை விசாரிக்க நீதிமன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது

ஐக்கியநாடுகள் சபையின் துணையுடன் சியராலியோனில் போர்க்காலத்து கைதிகளை விசாரிப்பதற்கான நீதிமன்றம் ஒன்று




ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தில் ஆபிரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டு போரில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கெதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளாக தொடரும் உள்நாட்டுப் போரினால், பரந்த அளவில் பொதுமக்கள் கொலை, பாலியல் சித்திரவதை ஆகியவற்றினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். அரசிற்கெதிரான போராளிக்குழுத் தலைவர்களும், அரச சார்பான குழுத் தலைவர்களும் இந்த நீதிமன்றத்தில் தண்டிக்கப்படவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சமாதான படையினரின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இந்த நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நாட்டின் உள்நாட்டுப் போரை மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்துவதற்கு ஐக்கிய நாட்டின் சமாதான படையினர் உதவியிருந்தனர்.

இந்த நாட்டின் உள்நாட்டுப் போரினால் இதுவரை 50,000 மக்கள் உயிரிழந்துள்ளனர். மக்களின் கை, கால்களை வெட்டுவதன் மூலம் போராளிக் குழுக்கள் பொதுமக்களைப் பயமுறுத்திவந்தன.



இதுவரை 9 போராளிக் குழுத்தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் அரச சார்பான குழுக்களைச் சார்தவர்களும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அமெரிக்காவைச் சேர்ந்த நீதிபதி டேவிட் கிரேன், நைஜீரியாவில் தஞ்சம் கோரியுள்ள லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி ரெயிலரை ஒப்படைக்குமாறு நைஜீரியாவை கேட்டுள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஹெரி மேலும் நான்கு மாநிலங்களில் வெற்றி

## கட்சியின் வேட்பாளராகவும் தெரிவு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயக அங்கத்தவர் ஜோன் ஹெரி மேலும் நான்கு மாநிலங்களில் வெற்றிபெற்றுள்ளார். அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளார்.



ஜோன் ஹெரி புளோரிடா, லுஷ்சியானா, மிசிசிப்பி ஆகிய மாநிலங்களில் அதி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளார். இதன்மூலம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இவர், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக தெரிவுசெய்யப்படவுள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி புஷ் தனது தேர்தல் பிரசாரங்களில் ஜோன் ஹெரியின் பொருளாதாரக் கொள்கைகளை முக்கியமாக விவாதித்து வருகின்றார்.

மேலும், 'இலினி யோஷ்' மாநிலத்தில் வெற்றியீட்டுவதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்சி வேட்பாளராக ஹெரி நியமிக்கப்படவுள்ளார்.

# அத்வானியின் ரதயாத்திரை நேற்று ஆரம்பமாகியது

(கன்னியாகுமரி)

இந்திய துணைப் பிரதமர் அத்வானி தனது ரதயாத்திரையை நேற்று கன்னியாகுமரியில் தொடங்கினார்.

இந்தியா ஒளிர்கிறது என்ற பேரில் கன்னியாகுமரியிலிருந்து அமிர்த சரஸ்வரை ரத யாத்திரையை மேற்கொள்கிறார் அத்வானி. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அவர் மேற்கொள்ளும் இந்த யாத்திரை நேற்றுக் காலை கன்னியாகுமரியில் தொடங்கியது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ரதயாத்திரை பொதுக்கூட்ட விழா தொடங்கியது. கன்னியாகுமரிக் கடற்கரைச்சாலையில் குண்டு துளைக்காத மேடை போடப்பட்டிருந்தது. திருச்செந்தூர்த் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் தாமோதரனை ஆதரித்து அத்வானி பேசினார்.

பின்னர் அகில இந்திய பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு கொடி அசைத்து ரத யாத்திரையை தொடக்கிவைத்தார். அப்போது, கைலாஷ் என்ற பாடகர் பாரதத் சமக்ர ஹாஹே (இந்தியா ஒளிர்கிறது) என்ற பாடலை ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் பாட ரதம் புறப்பட்டது. ரதத்திற்கு முன்னும் பின்னும் பொலிஸாரின் பாதுகாப்பு வாகனங்கள் செல்கின்றன.

விவேகானந்தபுரம் கொட்டாரம், சுசிந்தரம் வழியாக நாகர்கோவில் செல்லும் இந்த ரத யாத்திரை அங்கு நாடாளுமன்றத் தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளர் பொன் ராதாகிருஷ்ணனை ஆதரித்து பிரசாரம் செய்கிறார் அத்வானி.

பின்னர் தங்களை மார்த்தாண்டம், கழியக்காவிழை ஆகிய இடத்திலும் பொன் ராதா கிருஷ்ணனை ஆதரித்து ரதத்தில் இருந்தபடியே பிரசாரம் செய்கிறார் அத்வானி. பின்னர் திருவனந்தபுரத்தை ரதம் அடையும்.

யாத்திரை வெற்றியடைய பிரதமர் வாஜ்பாய் அத்வானிக்கு வாழ்த்துத் தெரிவித்தார். ரதயாத்திரையை முன்னிட்டு கன்னியாகுமரியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. யாத்திரை செல்லும் வழி எங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே அத்வானியின் ரதயாத்திரைக்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை டெல்கி உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது. தலைமை நீதிபதி படேல் மற்றும் நீதிபதி அகமது ஆகியோர் தமது தீர்ப்பில் தேர்தல் ஆணையாளர் யாத் திரைக்கு தடைவிதிக்க மறுத்துள்ளார். இதில் தலையிட உயர்நீதிமன்றம் விரும்பவில்லை என்றும் கூறியுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கேணல் பதுமன் குறித்த செய்திக்கு கல்வியலாளர் சமூகம் கண்டனம்!

(திருகோணமலை)

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் சமாதான சகவாழ்வுடன் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி ஒன்றுபட்டு வாழும் திருகோணமலை வாழ் தமிழ்மக்களிடையே அமைதியின்மையையும், வன்முறைகளையும் தூண்டி விடும் வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்திகளை அடுத்தடுத்து ஒலிபரப்பி வருவது வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கிழக்கு கல்வியியலாளர் சமூகம் கண்டித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் செய்தியறிக்கையில் திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன் கொல்லப்பட்டார் என்ற செய்தியையும், நேற்று நண்பகல் செய்தியறிக்கையில் திருகோணமலையில் ஒழுங்கு செய்யப்பட்ட ஹர்த்தால் மக்கள் ஆதரவின்மையால் பிசுபிசுத்துப்போனது என்றும், உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்பி திருகோணமலை வாழ் மக்களிடையே வன்முறையைத் தூண்டி, அமைதியாக வாழ்கின்ற மக்களிடையே இயல்பு வாழ்வைக்குழப்பி அரசியல் இலாபம் தேடிக்கொடுக்கும் இந்த நடவடிக்கைகளை திருகோணமலை வாழ் கல்வியியலாளர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

திருக்கோணமலை மாவட்ட தளபதி கேணல் பதுமன் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தியை ஒலிபரப்பிய மறுநாளே ஹர்த்தால் எதுவும் நடைபெறாது இருந்த திருகோணமலையில், ஹர்த்தாலுக்கு மக்கள் ஆதரவு இன்மையால் அது பிசுபிசுத்துப்போனது என்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்பி மக்கள் மத்தியில் அமைதியின்மையையும், வன்முறைகளையும் தூண்டிவிடும் முயற்சியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செயல்படுகின்றதோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற திருகோணமலையிலும் சமாதான சூழலைக்குழப்பும் நடவடிக்கையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் ஈடுபடாதிருக்க வேண்டும் என சமாதானத்தின் பெயரால் கேட்டுக்கொள்கின்றோம்.

திருகோணமலை மக்களாகிய நாம் எதையும் சிந்தித்து சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்பவர்கள் என்பதையும், தூரநோக்கிலான அரசியலறிவும், தெளிவும் கொண்டவர்கள் என்பதையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை புரிந்து கொள்ளவேண்டும் எனவும், கிழக்கு கல்வியியலாளர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01,04,10)

## 2 இலங்கை அகதிகள் குறித்து விளக்கம்தர சி.பி.ஐக்கு இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவு

செங்கல்பட்டு அகதிமுகாமில் நீண்டகாலமாக அடைத்துவைக்கப்பட்டுள்ள 2 அகதிகள் குறித்த விவரங்களை வழங்குமாறு சி.பி.ஐக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஈழமக்கள் புரட்சிகர முன்னணி தலைவர் பத்மநாபா மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைதாகி பின்னர் விடுதலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளான லிங்கம் மற்றும் வசந்தன் ஆகிய இருவரும் செங்கல்பட்டு அகதி முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக தம்மை அகதி முகாமில் அடைத்து வைத்துள்ளதாகவும் தம்மை விடுதலைசெய்து இலங்கைக்கு அனுப்பிவைக்க உதவ வேண்டும் என்று கூறி இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சதாசிவம் மற்றும் நீதிபதி சிங்காரவேலன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் இவர்கள் இருவரும் எதற்காக அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் இவர்கள்மீது இன்னும் எத்தனை வழக்குகள் உள்ளன. அவற்றின் விசாரணை நிலை ஆகியவற்றை வருகிற 16 ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு கூறி சி.பி.ஐக்கு உத்தரவிட்டுள்ளது.

## வாக்களிக்கச் செல்லும் அங்கவீனமுற்றவர்களின் பதிவு சிலதினங்களில் ஆரம்பமாகும்!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கச் செல்லவுள்ள சுகவீனமுற்ற வாக்காளர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் கேட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் விநியோகிக்கப்பட இருப்பதாகவும், விண்ணப்பங்களை தேர்தலுக்கு ஒரு வாரத்துக்குமுன் மாவட்டத்தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல்நலக்குறைவை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களையும், விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

உடல் நலக்குறைவு உள்ளவர்கள் வாகனங்களில் வந்து வாக்களிப்பதற்கான அனுமதி வழங்குவதற்கே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## யுத்தம் பேரழிவை ஏற்படுத்தும் என்பதை தென்னிலங்கை மக்கள் உணர்ந்துள்ளனர்!

### இரா. சம்பந்தன் கந்தளாயில் பேச்சு

இலங்கையில் மீண்டுமொரு யுத்தம் மூண்டால் அது பேரழிவையே ஏற்படுத்தும் என்பதை தென்னிலங்கை மக்கள் உணர்ந்துள்ளனர் என திருமலை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கந்தளாயில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறக்கூடிய நிலையில் இல்லை. இவ்வாறிருக்கையில், தமிழர்கள் தமது அரசியல் பலத்தை உறுதி செய்யவேண்டும்.

தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்பதை உலகிற்கு உணர்த்தவுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து நின்று தமிழரசுக் கட்சியைத் தெரிவுசெய்வதன் மூலம் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதித்துவத்தையும் சுயநிர்ணயத்தையும் வலியுறுத்தவேண்டும்.

வடக்கு - கிழக்கில் 22 ஆசனங்களையாவது தமிழ்க்கூட்டமைப்பு கைப்பற்றவேண்டும். இதற்கு அனைத்துத் தமிழர்களும் ஒன்று சேர்ந்து நின்று வாக்களிக்க வேண்டும்.

வீண் வதந்திகளுக்கும், பிரசாரங்களுக்கும் இடங்கொடுக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

கலைப்பீட 2 ஆம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் 12 மணியளவில் பொது அறையில் நடைபெற இருப்பதால் அனைத்து 2 ஆம் வருட மாணவர்களையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

### புலிகள்...

வாக உள்ளன.

அவர்கள் ஜனாதிபதியின் கருத்துக்கு முரண்பாடான வகையிலான கருத்துக்களையே பரப்பி வருகின்றனர். இந்நிலை நீடிப்பது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளையும் பாதிப்பதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வெள்ளை...

பாடு செய்ததை அடுத்து, சந்தேகத்தின் பேரில் சிலரை கைதுசெய்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் இரண்டு முஸ்லிம் குழுக்களிடையே முறுகல்நிலையொன்று யாழ். நகரப் பகுதியில் நேற்று மாலை ஏற்பட்டது. பொலிஸார் உதவியுடன் முறுகல்நிலை தவிர்க்கப்பட்டது.

### பொறுத்திருந்து...

பேற்கவேண்டுமென எமது தலைவர் கூறியுள்ளார். அதற்கமைவான திட்டத்தை தயார் செய்து வருகிறோம்.

அந்தத் திட்டங்கள் தயாரானதும் விரைவில் அங்கு செல்லவுள்ளோம். தற்போது தனது பக்க நியாயத்தைக் கூறுவதற்காக சில குற்றச் சாட்டுக்களை கருணா முன்வைககிறார். அவற்றை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளுக்கு எந்தெந்த வழிகளில் செல்லமுடியுமோ அந்தந்த வழிகளில் சென்று எமது நடவடிக்கையை விரிவுபடுத்தவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லஞ்ச, ஊழலுக்கு எதிராக ஐ.தே.க கடும் நடவடிக்கை

### நீதியமைச்சர் கூறுகின்றார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி லஞ்ச ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைளை எடுக்கும்.

இவ்வாறு நேற்று விசேட அறிவித்தலை வெளியிட்ட நீதியமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார். அந்த அறிவித்தலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஐக்கிய தேசியக்கட்சியே லஞ்ச ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுத்த கட்சியாகும். 1994 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதற்கு ஏகமனதாக ஆதரவை வழங்கினோம்.

லஞ்ச ஊழல்களுக்கெதிராக குரல் எழுப்பப்படுகின்றதேயொழிய, அதற்கெதிரான கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் திட்டமொன்று இன்றுவரை முன்வைக்கப்படவில்லை. எனவே இவற்றை நாம் மாற்றவேண்டும்.

ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு பின்னர் இதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

### மட்டு-அம்பாறை...

இத்தகையதொரு முடிவெடுத்திருப்பதாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே உருவாக்கப்பட்டதால், புதியதொரு நிர்வாகத்தினை உருவாக்கியுள்ள கருணாவின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ளாத வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கவச மீட்பு படைப்பிரிவு...

உருவாக்குவது போன்ற பரீட்சார்த்த ஒத்திகை நடவடிக்கைகள் இந்த ஒத்திகை நிகழ்வில் மேற்கொள்ளப்பட்டன.

கவச மீட்பு வாகனங்கள் மற்றும் கவச வாகனங்களைச் செலுத்தும் படைப்பிரிவுகள் முதலாவது பிரிவுக்கான கற்கைநெறி கட்டளை அதிகாரியாக எம்.பீரிஸ் மற்றும் 516 ஆவது 554 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரிகள் ஆகியோர் இந்த நடவடிக்கைக்கு உதவிபுரிந்தனர்.

இந்த நிகழ்வின் மூலம் அதிகாரிகள் மற்றும் படையினர் நடைமுறையில் செயற்பாடுகளை விரிவாக அதிகரித்துக் கொணட்டதாக கூறப்படுகிறது.

42 ஆவது மற்றும் 8 ஆவது கவசப்படை பிரிவுகள் 516 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் காலாற்படைப்பிரிவுகளின் கட்டளை அதிகாரிகளும் இந்த பரிட்சார்த்த ஒத்திகை நடவடிக்கையை பார்வையிட்டனர்.

## யாழ். நிலைமை பற்றி ஆராய...

சந்தித்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை, வன்னிப் பிரதேச மக்கள் வாக்களிகக மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

தொடர்ந்து காலை 11 மணியளவில் யாழ். ஆயர் இல்லத்திற்குச் சென்ற அவர்கள், அங்கு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். அங்கும் தேர்தல் தொடர்பான யாழ். மாவட்ட நிலைப்பாடுகள் மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசு ஒன்று எவ்வாறு அமைய வேண்டும். தமிழ் மக்கள் எவ்வாறான அரசை விரும்புகின்றனர். வன்னி மக்கள் சுமுகமாக வாக்களிக்க வழிசெய்வது எவ்வாறு முதலான விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

பின்னர் மாலை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளா சி.இளம்பரிதியை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்துக் கலந் துரையாடிய இவர்கள், நேற்று மாலையே கொழும்பு திரும்பினர்.

## வன்னி மக்கள் வாக்களிப்பதற்கு...

னத் தேவைகள் உடனடியாக பூர்த்தி செய்யப்படாத நிலையில், மக்கள் விரும்பிய இயல்புநிலை ஏற்படுத்தப்படாமல் உள்ளது.

மாறாக இராணுவ நெருக்குவாரம் அதிகரித்து, அரசியல் நெருக்கடி நிலையும் தோன்றியுள்ளது.

மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில், அவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். இதைவிட இராணுவ நெருக்குவாரத்தினால் மக்கள் மத்தியில் விரக்தி நிலையொன்று தோன்றியுள்ளது.

இவ்வாறான நிலையில் நோர்வே இதற்கான தகுந்த தீர்வொன்றை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஏபரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை, தமது அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான நல்ல சந்தர்ப்பமாக தமிழ்மக்கள் கருதுகின்றனர். உண்மையில் இந்தத் தேர்தல் நீதியான தேர்தலாக அமையவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளாகிய நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

இதைவிட தேர்தல் நடவடிக்கைகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

தமிழ்மக்களின் கூட்டாக இருக்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு நாம் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றோம். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு முழுமையான ஜனநாயகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

முகமாலை சோதனைச்சாவடியில் கிளிநொச்சி தேர்தல் தொகுதிக்கான வாக்களிப்பு நிலையத்தை அமைத்து, சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களின் உதவியுடன் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் ஒழுங்குகள் செய்யவேண்டும். இராணுவ சோதனை அகற்றப்படவேண்டும். இதற்கு நோர்வேயும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவும் உதவ வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.